Sri

Manatunga Charya's

BHAKTAMARA STOTRA

WITH

TAMIL MEANING

EDITED

BY

PROF. A. CHAKRAVARTHI, M.A; I.E.S.

PRINTED AT THE

SRI KOMALAMBA PRESS,

KUMBAKONAM.

1932

ஓம்

ஸ்ரீவீதராகாய நம:

ஸ்ரீகுந்தகுந்தாசார்யரால்

இயற்றப்பட்ட

॥ பஞ்சாஸ்திகாயஸாரம் ॥

தமிழ்ப்பதவுரையுடன்

ஏ. சக்கரவர்த்தி, எம். ஏ., ஐ. இ. எஸ்.

அவர்களால்

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1932.

ஓம்

ஸ்ரீ ஜிநாய நம: ॥

முகவுரை.

இந்த ஆதிநாத ஸ்தோத்திரம் என்ற நூல் ஸ்ரீமாநதுங்க முனிவரால் இயற்றப்பட்டது. "கல்யாணமந்திரம்" "ஏகீபாவம்" என்ற நூல்கள் போலவே, இந்நூலும் ஆரம்பத்தில் உள்ள வார்த்தையையே தன் பெயராகப்பெற்று, "பக்தாமர" ஸ்தோத்திரம் என்று வழங்கி வருகிறது. ஜைநர்களுக்கு முக்கியமான பஞ்சஸ்தோத்திரங்களில் இது முதலாவது, ச்வேதாம்பரர், திகம்பரர் என்ற இரு வகுப்பினர்களாலும் மேன்மையானதாகக் கொண்டாடப்பட்டு, நித்யஸ்துதிபாடமாக அத்தியயனம் செய்யப்பட்டுவருகிறது. சொல்நயம் பொருள் நயம் வாய்ந்த இனிமையான இந்தப் பாமாலை வடநூற்பயிற்சியுள்ளவர்களால் நன்கு மதிக்கப்பெற்றுள்ளது.

இந் நூலியற்றிய வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:- மாளவ தேசாதிபதியான போஜ மஹாராஜன் உஜ்ஜயினி நகரத்தில் அரசுபுரிந்து வரும் நாளில் அந்த இராஜதானியில் அநேக கவிச்ரேஷ்டர்களும் சாஸ்திர பாரங்கதர்களான அநேக வித்வான்களும் அரசனால் ஆதரிக்கப்பட்டு வஸித்துவந்தார்கள். காளிதாஸன், பாணன், பர்த்ருஹரி என்ற புலவர்கள் ஒரு காலத்தவர்களாகக் கூறப்பட்டுள்ளார். இவர்கள் போஜராஜன் ஸபையில் விளங்கினார்கள். ஒருநாள் ஜைநமதாவலம்பியான ஸுதத்தன் என்ற பெயர்கொண்ட ஒரு ச்ரேஷ்டி இராஜஸபைக்குச்சென்றான். அவனுடன் அவன் புத்திரனாகிய சிறுவனும் இருந்தான். போஜராஜன் ச்ரேஷ்டியை யோகக்ஷேமங்களை விசாரித்து "உன்மகன் படித்து வருகிறானா" என்று வினவ, ச்ரேஷ்டி "ஆம். இப்பொழுதுதான்

வித்தியாரம்பம் செய்து தநஞ்சய கவியால் பாலக பொருட்டுச் செய்யப்பட்ட "நாமமாலை" என்ற புஸ்தகம் படித்து வருகிறான்" என்று பதில் சொன்னான். ராஜா தநஞ்சயனென்னும் கவிவானைப் பார்க்க விரும்பி ஸபைக்கு வரவழைத்து ஸத்காரம்செய்து ஸம்பாஷித்துக் கவித்திற மைக்குத் தகுந்த ஒரு பெரிய நூல் செய்தருளவேண்டுமென் றான். இதுகேட்டு மனம் ஸஹியாது காளிதாஸன், "இந்த ஜைந வித்வான் நேற்றுவரையில் மாநதுங்கஸூரி என்பவ னிடத்தில் பாடம்கேட்டுவந்தான். அவனுக்கு நூலியற்றும் திறமை ஏது" என்று அவமதிப்பான சொல்லைக் கூற, தநஞ்சய கவி மனம் கொதித்து அவனுடன் சாஸ்திர வாதம்செய்து ஜெயம் பெறவேண்டுமென்ற எண்ணங் கொண்டான். காளிதாஸனைத் தனஞ்சயன் ஸ்யாத்வாதாஸ்தி ரத்தால் தாக்கி வீழ்த்தும் ஸமயத்தில் காளிதாஸன், தான் எதிரியின் குருவாகிய மானதுங்கஸூரியிடம் வாதம்செய்ய விருப்பமுள்ளவனாக அரசனுக்குத் தெரிவித்தான். போஜ ராஜன் புலவர்போரில் ஆநந்தம்கொண்டவனாதலால் அப் படியே ஸம்மதித்து முனிவரை இராஜஸபைக்கு அழைத்து வரும்படி சேவகர்களை அனுப்பினான்.

மானதுங்கமுனி ஸம்ஸார வைராக்யமடைந்து ஸர்வ பரித்தியாகியான யதி யானதால் இராஜஸபைக்குப் போக ஒப்பவில்லை. "எனக்கு அரசனிடம் என்ன வேலை? ஸந் யாஸியாகிய யான் இராஜஸபைக்கு வந்து ஸம்மானம்பெறப் போகிறேனா? விஷயஸுகஸம்பூர்ணனான இராஜனுக்கும் ஸம் ஸார நிர்விண்ணனான என்போன்ற முனிக்கும் என்ன ஸம் பந்தமுண்டு?" என்று பலவாறாகக் காரணங்களை எடுத்துக் காட்டிச் சேவகர்களை அனுப்பிவிட்டான். அரசனிடம் அவர்கள் போய் முனிவரன் வாராததையும் காரணத்தையும் சொன்னார்கள்; அதைக் கேட்ட காளிதாஸன், "இந்த ஜைந

முனி கல்விக்குறைவால் புலவர்நிறைந்த இராஜஸபையை நினைத்த மாத்திரத்தில் நடுநடுங்கி வாராது ஒழிந்தான்" என்றான். அரசன் தன்னை அவமதித்து ஆணையை மீறினதாக எண்ணி முனிவரனைக் கைதிசெய்து வரும்படி உத்தரவு செய்தான்.

காவலாளர்கள் அரசன் உத்தரவுப்படி மானதுங்க முனியைக் கைதுசெய்துகொண்டுவந்தார்கள். முனிவரன் மௌனவிரதம் கைக்கொண்டு தியானபாவசனாயினான். சபையில் அரசனும் மற்றுமுள்ளவர்களும் எதைக் கேட்டாலும் பதிலொன்றும் சொல்லாது ஆத்ம தியானத்தில் நின்றானாதால் அரசன் கோபித்து விலங்கிட்டுச் சிறைச்சாலையில் வைக்கும்படி ஆஜ்ஞாபித்தான். முனிச்ரேஷ்டனும் அவ்வாறே அடைக்கப்பட்டான்.

அரசன் ஆணையால் கைதியுற்றுச் சிறையிலடைக்கப் பெற்ற மாநதுங்கமுனி இரண்டுநாள் கஷ்டமனுபவித்து மூன்றும் நாள் மந்திரமாஹாத்மியம் பொருந்திய பக்தி நிறைந்த இந்த பக்தாமர ஸ்தோத்திரத்தை இயற்றி ஆதி ஜிநேசனை ஸ்துதித்தான். உடனே விலங்குகள் துண்டுதுண்டாய் நூறுங்கின. கதவுகள் படீரென்று அகன்றன. முனிவான் சிறை நீங்கிச் சென்றான். கண்ட காவலாளர் நடுங்கினார்கள். அரசன் கேட்டு முனிவரனை ஸபைக்குக் கொண்டு வரும்படி செய்தான். சிறை நீங்கிய முனியைக் கண்டதும் உள்ளம் நடுங்கினான், அரசனுக்குத்தைரியமுண்டாக்கும்படியும் முனியை பயமுறுத்தும்படியும் காளிதாஸன் தனக்கு வரமளிப்பவளான காளிகாதேவியை நினைத்தான். அவளும் பயங்கரமாண சண்டரூபத்துடன் தோன்றினாள். அவ்வளவிலே முனிவரனைப் பாதுகாக்கும்பொருட்டு ஆதீச்வரன் சாஸனதேவதையாகிய சக்ரேச்வரியும் பிரத்யக்ஷமானாள்.

காளி இவருடைய ஸௌந்தர்யமான தயாரூபத்தைக் கண்டு தன் குரூரகுணம் நீங்கி விநயத்தோடு நின்றாள். ஹிம்ஸைத் தொழில்விட்டு ஸத்புருஷர்களை உபஸர்க்கம்செய்யாது உதவி புரிந்து ஒழுகுதல் தேவதாலக்ஷணமாம் என்று சக்ரேச்வரி சொல்லக் கேட்டு மானபங்கமடைந்து அஹிம்ஸா விரதம் கைக்கொண்டு சென்றாள். அரசனும் மாநதுங்க முனியிடம் அஹிம்ஸா விரதம் பூண்டுகொண்டான்.

இக்கதையால் தநஞ்சய கவி, நம் நூலாசிரியராகிய மாநதுங்க முனிக்கு சிஷ்யனென்றும் இருவரும் போஜராஜன் காலத்தவரென்றும் விளங்குகிறது. சரித்திரஆராய்ச்சியால் தநஞ்சய கவி பரமாரவம்சத்து அரசனாகிய 'முஞ்சன்' என்பவனாலும், அவனுக்குப்பின் உஜ்ஜயினியில் அரசுபுரிந்து வந்தவனும் அவன் ஸஹோதரன் மகனுமாகிய போஜனாலும், ஆதரிக்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இந்த போஜராஜன் கி. பி. 1018 முதல் 1060 வரையில் அரசு நடாத்தி வந்தான்.

இவர்களுடனிருந்ததாகக் கூறப்பட்ட கவிசக்ரவர்த்தியான காளிதாஸன் உண்மையில் கி.பி. ஐந்தாவது நூற்றாண்டிலிருந்ததாகத் தெரிகிறது. மாளவதேசத்தை ஆண்டுவந்த குப்த வம்ச திலகனான சந்திரகுப்த விக்கிரமாதித்யன் என்று பிரஸித்திபெற்ற அரசன் காலத்திலிருந்தவன். இந்தக் காலம் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டு என்பது சரித்திர ஆராய்ச்சியாலும் கல்வெட்டுகளாலும் நன்று நிச்சயிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் தநஞ்சயனும் காளிதாஸனும் ஸமகாலத்தவர் என்று கூறுவது கதைக் கூற்றேயொழிய சரித்திர நிகழ்ச்சியன்று.

𑍐

𑌶𑍍𑌰𑍀𑌜𑌿𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌓𑌂 𑌨𑌮𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌭𑍍𑌯𑌃

॥ 𑌓𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌮𑌰𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑍍 ॥

𑌭𑌕𑍍𑌤𑌾𑌮𑌰𑌪𑍍𑌰𑌣𑌤𑌮𑍌𑌲𑌿𑌮𑌣𑌿𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿 1
𑌰𑍁𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌤𑌂 𑌦𑌲𑌿𑌤𑌪𑌾𑌪𑌤𑌮𑍋𑌵𑌿𑌤𑌾𑌨𑌮𑍍 ।
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌜𑌿𑌨𑌪𑌾𑌦𑌯𑍁𑌗𑌂 𑌯𑍁𑌗𑌾𑌦𑌾
𑌵𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌭𑌵𑌜𑌲𑍇 2 𑌪𑌤𑌤𑌾𑌂 𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

𑌭𑌕𑍍𑌤𑌾𑌮𑌰𑌪𑍍𑌰𑌣𑌤𑌮𑍌𑌲𑌿𑌮𑌣𑌿𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿𑌃, 𑌭𑌕𑍍𑌤 - பக்தர்களாயிருக்கிற, 𑌅𑌮𑌰 - தேவர்களுடைய, 𑌪𑍍𑌰𑌣𑌤 - வணங்கின, 𑌮𑍌𑌲𑌿 - கிரீடங்களிலுள்ள, 𑌮𑌣𑌿 - ரத்நங்களுடைய, 𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿𑌃 - காந்திகளால், 𑌉𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌤𑌂 - பிரகாசிப்பிக்கப்பட்டதும், 𑌦𑌲𑌿𑌤𑌪𑌾𑌪𑌤𑌮𑍋𑌵𑌿𑌤𑌾𑌨𑌂, 𑌦𑌲𑌿𑌤 - போக்கடிக்கப்பட்ட, 𑌪𑌾𑌪 - பாவங்களாகிற, 𑌤𑌮𑌃 - இருட்டுக்களுடைய, 𑌵𑌿𑌤𑌾𑌨𑌮𑍍 - ஸமூஹத்தையுடைத்தாயிருப்

1 𑌪𑍍𑌰𑌭𑌾𑌣𑌾𑌮𑍁𑌦𑍍𑌯𑍋𑌤𑌕𑌂 என்றும் பாடம். காந்திகளுக்குப் பிரகாசத்தை உண்ணுபண்ணுகிற என்பது பொருள்.
"தேவேந்திரன் மகுடமணிகள் பிரகாசமுள்ள பாதங்களினின்றும் சோதியடைகின்றன என்று தாத்பர்யம்.

2 𑌭𑌵𑌨𑌿𑌧𑍌 - என்றும் பாடம் 𑌨𑌿𑌧𑌿 - கடல்

பதம், யுகாதௌ, யுக - யுகத்தினுடைய, ஆதௌ - முதலிலே, நாலாங்காலத்தின் ஆதியிலே, பவஜலே, பவ ஸம்ஸாரமாகிற, ஜலே - ஜலத்தில், பததாம் - விழாநின்றிருக்கிற, ஜநாநாம் - ஜனங்களுக்கு, ஆலம்பநம் - ஆதாரபூதமாயிருப்பதுமான, ஜிநபாதயுகம், ஜிந-ஜிநேச்வரருடைய, பாத - கால்களுடைய, யுகம் - இரட்டையை, ஸம்யக் - நன்றாக, ப்ரணம்ய - நமஸ்காரம் பண்ணி. (க)

யஸ்ஸம்ஸ்துதஸ்ஸகலவாங்மயதத்வபோதா
துத்பூதபுத்திபடுபிஸ்ஸுரலோகநாதை: |
ஸ்தோத்ரைர்ஜகத்த்ரிதயசித்தஹரைருதாரை:
ஸ்தோஷ்யே கிலாஹமபி தம் ப்ரதமம் ஜிநேந்த்ரம் ||

ஸகலவாங்மயதத்வபோதாத் - எல்லா வித்தைகளுடையவும் உண்மையை அறிந்திருப்பதால், உத்பூதபுத்திபடுபி: - நன்றாகப் பிறந்த புத்திகொண்டு ஸமர்த்தர்களான, ஸுரலோகநாதை: - தேவலோகாதிபதிகளால் (தேவேந்திரர்களால்) ஜகத்த்ரிதயசித்தஹரை:, ஜகத்த்ரிதய- மூன்று உலகத்தினுடையவும் (மூன்று உலகத்தாருடையவும்) சித்தஹரை: - மனத்தைக் கவர்கின்ற, உதாரை:- கம்பீரமான பொருளமைந்த, ஸ்தோத்ரை: - ஸ்தோத்திரங்களால், ய: - யாதொருவர், ஸம்ஸ்துத: - நன்றாக ஸ்துதிக்கப்பட்டாரோ, தம் ப்ரதமம் ஜிநேந்த்ரம் - அந்த முதல்வரான வ்ருஷபதீர்த்தங்கரரை, அஹமபி - நானும், ஸ்தோஷ்யே கில, ஸ்துதிப்பேன்போலும்.

எந்த ஆதிபகவன் வ்ருஷபஜிநேசர், சாஸ்த்ர பாரங்கதர்களாகிய தேவேந்திரர்களால் ஸ்துதிக்கப்பட்டாரோ, அவரையே நானும் ஸ்துதிக்கப் புகுதும். என்ன ஆச்சரியம் !

𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌪𑌿 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌪𑌾𑌦𑌪𑍀𑌠
𑌸𑍍𑌤𑍋𑌤𑍁𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌮𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌗𑌤𑌤𑍍𑌰𑌪𑍋𑌽𑌹𑌂 |
𑌬𑌾𑌲𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌜𑌲𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌿𑌨𑍍𑌦𑍁𑌬𑌿𑌮𑍍𑌬𑌮𑍍
𑌅𑌨𑍍𑌯𑌃 𑌕 𑌇𑌚𑍍𑌛𑌤𑌿 𑌜𑌨𑌃 𑌸𑌹𑌸𑌾 𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍁𑌮𑍍 ||

𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌪𑌾𑌦𑌪𑍀𑌠 - தேவர்களால் பூஜிக்கப்பட்ட பாதபீடத்தையுடைய வ்ருஷப தீர்த்தங்கரரே, 𑌅𑌹𑌮𑍍 - யான், 𑌵𑌿𑌗𑌤𑌤𑍍𑌰𑌪𑌃 (𑌸𑌨𑍍) வெட்கமில்லாதவனாகி, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌪𑌿 - புத்தியில்லாதிருந்தும், 𑌸𑍍𑌤𑍋𑌤𑍁𑌮𑍍 - ஸ்தோத்திரம் பண்ணுவதற்கு, 𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌮𑌤𑌿𑌃 - முயற்சியுள்ள புத்தியுடையவனாக (𑌅𑌸𑍍𑌮𑌿 - இருக்கிறேன்) 𑌬𑌾𑌲𑌮𑍍 - பாலனை, 𑌵𑌿𑌹𑌾𑌯 - விட்டு, தவிர, 𑌜𑌲𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 - ஜலத்திலேயிருக்கிற, 𑌇𑌨𑍍𑌦𑍁𑌬𑌿𑌮𑍍𑌬𑌮𑍍 - சந்திரபிம்பத்தை, 𑌸𑌹𑌸𑌾 - சீக்கிரமாக, 𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍁𑌮𑍍 - கைக் கொள்வதற்கு 𑌅𑌨𑍍𑌯𑌃-வேறு, 𑌕𑌃 𑌜𑌨𑌃-எந்த மனிதன், 𑌇𑌚𑍍𑌛𑌤𑌿-விரும்புகிறான் (விரும்புவான்)

எப்படி அறிவற்ற குழந்தை ஜலத்தில் காணும் சந்திர பிம்பத்தைப் பிடிக்க முயலுகிறதோ, அப்படியே நானும் உம்மை ஸ்துதிப்பதற்கு ஆரம்பித்துவிட்டேன். இது பரிஹாஸமாய் முடியுங்கொல். (3)

𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍
𑌕𑌸𑍍𑌤𑍇 𑌕𑍍𑌷𑌮𑌃 𑌸𑍁𑌰𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌽𑌪𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 |
𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑌪𑌵𑌨𑍋𑌦𑍍𑌧𑌤𑌨𑌕𑍍𑌰𑌚𑌕𑍍𑌰𑌂
𑌕𑍋 𑌵𑌾 𑌤𑌰𑍀𑌤𑍁𑌮𑌲𑌮𑌮𑍍𑌬𑍁𑌨𑌿𑌧𑌿𑌂 𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 ||

𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌰 - குணங்களென்கிற ஸமுத்திரத்திற்குச் சந்திரனுயிருக்கிற ஜிநேச்வரரே, 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 -

அழகிய; அல்லது, குணஸமுத்ர - குணங்களுக்கு ஸமுத்திரமாயிருக்கிற ஜிநேஶ்வரரே, - ஸமுத்திரத்தில் இரத்தினங்களிருப்பனபோல இவரிடம் குணங்கள் இருக்கின்றன என்பது கருத்து. தே - உம்முடைய, ஶஶாங்ககாந்தாந் - சந்திரனைப்போல அழகுள்ள, குளிர்ந்த, குணாந் - குணங்களை, வக்தும் - சொல்வதற்கு, புத்த்யா - புத்தியினால், ஸுரகுருப்ரதிமோऽபி - தேவகுருவாகிய பிரஹஸ்பதி போன்றவனாயிருந்த போதிலும், க꞉ - எவன், க்ஷம꞉ - ஸமர்த்தன்? கல்பாந்தகால...வநம், கல்பாந்தகாலபவந - பிரளயகாலத்திலுண்டான காற்றினால், உத்தத - கிளப்பப்பட்ட, நக்ரசக்ரம் - முதலைகளின் ஸமூஹங்களையுடைய, அம்புநிதிம் - ஸமுத்திரத்தை, புஜாப்யாம் - கைகளால், தரீதும் - நீந்திக்கடப்பதற்கு, கோ வா - எவன் தான் அலம் - ஸமர்த்தன்.

பிரளயகாலக் காற்றினால் கலக்கப்பட்டதும் பயங்கரமானதும் தாண்டக்கூடாததுமான ஸமுத்திரத்தைக் கைகளால் நீந்திக் கடப்பது எப்படிக் கூடாத காரியமோ, அப்படியே நான் தம்முடைய குணங்களை சொல்லப் புகுவதும் இயலாத காரியம். (4)

ஸோऽஹம் ததாபி தவ பக்திவஶாந்முநீஶ
கர்தும் ஸ்தவம் விகதஶக்திரபி ப்ரவ்ருத்த꞉ ।
ப்ரீத்யாத்மவீர்யமவிசார்ய ம்ருகீ ம்ருகேந்த்ரம்
நாப்யேதி கிம் நிஜஶிஶோ꞉ பரிபாலநார்தம் ॥

ததாபி - அப்படியிருந்தபோதிலும், முநீஶ - ருஷ்யாதி முனிகளுக்கு நாதரே, ஸோऽஹம் - அப்படிப்பட்ட

நானும், விமதஶக்திரபி - சக்தியற்றவனுயிருந்தபோதி லும், பக்திவஶாத் - பக்திமூலம், தவ - உம்முடைய, ஸ்தவம் - ஸ்தோத்திரத்தை, கர்த்தும் - செய்வதற்கு, ப்ரவ்ருத்த: - ஆரம்பித்துவிட்டவனுயிருக்கிறேன். ம்ருகீ - பெண்மானு னது, ஸ்வவீர்யம் - தன் பராக்கிரமத்தை, அவிசார்ய - விசாரியாமல், ப்ரீத்யா - பிரீதியினுல், நிஜஶிஶோ: - தன்னுடைய குட்டியின், பரிபாலநார்த்தம் - ரக்ஷையின் பொருட்டு, ம்ருகேந்த்ரம் - ஸிம்மத்தை, நாப்யேதி கிம் - எதிர்க்கிறதில்லையா என்ன ?

மான் தன் குட்டியை ரக்ஷிக்கும்பொருட்டு ஸிம்மத்தை யெதிர்ப்பதற்குக் காரணம் தன் குட்டியின் மேலுள்ள பிரீதி யே யொழிய தன்னுடைய பராக்கிரமமன்று. அப்படியே நானும் உம்மை ஸ்தோத்திரம் செய்யப் புகுதற்கு உம்மிடத்தி லுள்ள பக்தி காரணமே யொழிய என் சக்தியன்று. (5)

அல்பஶ்ருதம் ஶ்ருதவதாம் பரிஹாஸதாம
த்வத்பக்திரேவ முகரீகுருதே பலாந்மாம் ।
யத்கோகில: கில மதௌ மதுரம் விரௌதி
தச்சாருசூதகலிகாநிகரைகஹேது: ॥

அல்பஶ்ருதம் - கொஞ்சம் படிப்பையுடையவனும், ஶ்ருதவதாம் - படித்தவர்களுடைய, பரிஹாஸதாம - பரிஹாஸத்திற்கு இடமாயுமிருக்கிற, மாம் - என்னை, த்வத்பக்திரேவ - உம்மிடத்திலுள்ள பக்திதான், பலாத் - வலுவில், முகரீகுருதே - பேசும்படி செய்கிறது. கோகில: - குயிலானது, மதௌ - வஸந்தகாலத்தில், மதுரம் - அழ காக, விரௌதி இதி யத் - கூவுகிறதென்பது யாதொன் றுண்டோ, தத் - அது, சாருசூத ... ஹேது:

𑌕𑌿𑌲 𑌚𑌾𑌰𑍁 - அழகான, 𑌚𑍂𑌤𑌕𑌲𑌿𑌕𑌾𑌨𑌿𑌕𑌰 - மாமரத்தின் மொட்டு ஸமூஹத்தை, 𑌐𑌕𑌹𑍇𑌤𑍁 𑌕𑌿𑌲 - முக்கியகாரணமாக உடையதல்லவா.

குயிலின் குரல், ஏனைய காலத்தில் ஸாதாரணமாயிருக்க, வஸந்த காலத்தில் மட்டும் மிக இனிமையாயிருக்கிறதற்கு முக்கிய காரணம், அது தின்னும் சிறந்த மாமொட்டுக்களே, அப்படியே உம்மை ஸ்துதிசெய்யும்படி என்னைத் தூண்டுகிற பக்தியே இந்த ஸ்தோத்ரமாலைக்கு முக்கிய காரணம். இதுவும் மதுரமாயிருக்கும் என்பது பெறப்படுகிறது. (6)

𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌤𑌵𑍇𑌨 𑌭𑌵𑌸𑌂𑌤𑌤𑌿𑌸𑌂𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌂
𑌪𑌾𑌪𑌂 𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌶𑌰𑍀𑌰𑌭𑌾𑌜𑌾𑌂 ।
𑌆𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌲𑍋𑌕𑌮𑌲𑌿𑌨𑍀𑌲𑌮𑌶𑍇𑌷𑌮𑌾𑌶𑍁
𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌂𑌶𑍁𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌿𑌵 𑌶𑌾𑌰𑍍𑌵𑌰𑌮𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌮𑍍 ॥

𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌤𑌵𑍇𑌨, 𑌤𑍍𑌵𑌤𑍍 - உம்முடைய, 𑌸𑌂𑌸𑍍𑌤𑌵𑍇𑌨 - ஸ்தோத்திரத்தினாலே, 𑌶𑌰𑍀𑌰𑌭𑌾𑌜𑌾𑌂 - சரீரத்தை அடைந்திருக்கிற ப்ராணிகளுடைய, 𑌭𑌵𑌸𑌂𑌤𑌤𑌿𑌸𑌂𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌂 - 𑌭𑌵 - ஜந்மங்களுடைய, 𑌸𑌂𑌤𑌤𑌿 - பரம்பரையினாலே, 𑌸𑌂𑌨𑌿𑌬𑌦𑍍𑌧𑌂 - கட்டப்பட்டிருக்கிற, சேர்ந்திருக்கிற, 𑌪𑌾𑌪𑌂 - பாபமானது, 𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 - க்ஷணத்தில், 𑌆𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌲𑍋𑌕𑌂 - 𑌆𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 - ஆக்ரமிக்கப்பட்டிருக்கிற, 𑌲𑍋𑌕𑌂 - லோகத்தயுடைத்தாயிருப்பதும், 𑌅𑌲𑌿𑌨𑍀𑌲𑌂 - 𑌅𑌲𑌿 - வண்டு போல, 𑌨𑍀𑌲𑌂 - கருத்திருப்பதாயும், 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌂𑌶𑍁𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 - 𑌸𑍂𑌰𑍍𑌯 - ஸூர்யனுடைய, 𑌅𑌂𑌶𑍁 - கிரணங்களினாலே, 𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 - பிளக்க (போக்கடிக்க)ப்பட்டிருப்பதுமான, 𑌶𑌾𑌰𑍍𑌵𑌰𑌂 - ராத்ரியிலுண்டாயிருக்கிற, 𑌅𑌶𑍇𑌷𑌂 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌮𑌿𑌵 - இருள் முழுவதையும்போல, 𑌆𑌶𑍁 - சீக்கிரமாக, 𑌕𑍍𑌷𑌯𑌂 - நாசத்தை, 𑌉𑌪𑍈𑌤𑌿 - அடைகின்றது.

ஸூரியகிரணம் உலகத்தில் பேரிருளை ஒழிப்பதுபோல உம்முடைய ஸ்தோத்ரம் பிராணிகளுடைய பாபத்தை ஒரு க்ஷணத்தில் நாசம் செய்யும். (7)

மத்வேதி நாத தவ ஸம்ஸ்தவநம் மயேதம்
ஆரப்யதே தநுதியாபி தவ ப்ரபாவாத் ।
சேதோ ஹரிஷ்யதி ஸதாம் நளிநீதளேஷு
முக்தாபலத்யுதிமுபைதி நநூதபிந்து: ॥

ஹே நாத - வாராய் ஸ்வாமியே, இதி - இந்தப் பிரகாரம், மத்வா - எண்ணி, தவ - உம்முடைய, இதம் - இந்த, ஸம்ஸ்தவநம் - ஸ்தோத்திரமானது, தநுதியாபி, தநு - அல்பமாயிருக்கிற, தியாபி - புத்தியையுடைத்தானவனாயிருந்தாலும், மயா - என்னாலே, தவ - உம்முடைய ப்ரபாவாத் - கிருபையினால், ஆரப்யதே - ஆரம்பிக்கப் படுகிறது. (இது) (தவப்ரபாவாத்) ஸதாம் - ஸத்புருஷர்களுடைய, சேத: - மனத்தை, ஹரிஷ்யதி - கவரப்போகிறது; உதபிந்து: - நீர்த்துளியானது, நளிநீதளேஷு - நளிநீ - தாமரைகளுடைய, தளேஷு - இலைகளிலே, முக்தாபலத்யுதிம், முக்தாபல - முத்துக்களுடைய, த்யுதிம் - சோபையை, உபைதி நநு அடைகின்றதல்லவா.

எப்படித் தாமரையிலையில் தங்கிய நீர்த்துளிகள் முத்து போல் பிரகாசிக்கின்றனவோ, அப்படியே உம்மை ஆதாரமாக உடைய இந்த ஸ்தோத்திரம் ஸத்புருஷர்களுடைய மனத்தைக் கவரும்படியான குணத்தை யடையும்என்பது நிச்சயம். (8)

ஆஸ்தாம் தவ ஸ்தவநமஸ்தஸமஸ்ததோஷம்
த்வத்ஸங்கதாபி ஜகதாம் துரிதாநி ஹந்தி ।

தூரே ஸஹஸ்ரகிரண: குருதே ப்ரபைவ
பத்மாகரேஷு ஜலஜாநி விகாஸபாஞ்ஜி ॥

அஸ்தஸமஸ்ததோஷம், அஸ்த - போக்கடிக்கப்பட்ட, ஸமஸ்த தோஷம் - ஸகல தோஷங்களையுமுடையதான, தவ ஸ்தவநம் - உம்முடைய ஸ்துதியானது, ஆஸ்தாம் - இருக்கட்டும். த்வத்ஸங்கதாபி - உம்மைப்பெயரால் வணங்குவதுகூட, அதாவது நாமஸ்தவனம் மட்டுமே ஜகதாம் - லோகங்களுடைய, (லோகத்தாருடைய) துரிதாநி - பாபங்களை, ஹந்தி - போக்கடிக்கிறது. ஸஹஸ்ரகிரண: - ஸூரியன், தூரே - தூரத்தில், (அஸ்து - இருக்கிறான்) ப்ரபைவ - (அவனுடைய) ஒளிதான், பத்மாகரேஷு - தாமரைத் தடாகங்களில், ஜலஜாநி - தாமரைப்பூக்களை, விகாஸபாஞ்ஜி - மலர்ச்சியுடையனவாக, குருதே - பண்ணுகின்றது.

ஸூரியன் தூரத்திலிருந்தும் கிரணம் தாமரையை மலரச் செய்கிறது. அதுபோல் நீர் அறியக்கூடாத நிலைமையிலிருக்க, உம்முடைய நாமத்தைச் சொல்லுவதே ஜநங்களின் பாபத்தைப் போக்கும். (ஆகையால் குணஸ்தவனம் உம்முடைய நித்தியகுணங்களைக்கொண்டு துதிக்க முயலுவதுஏன்.)

நாத்யத்புதம் புவநபூஷண பூதநாத
பூதைர்குணைர்புவி பவந்தமபிஷ்டுவந்த: ।
துல்யா பவந்தி பவதோ நநு தேந கிம் வா
பூத்யாச்ரிதம் ய இஹ நாத்மஸமம் கரோதி ॥

புவநபூஷண, புவந - லோகத்திற்கு, பூஷண - அலங்காரமாயிருக்கிற, பூதநாத, பூத - ப்ராணிகளுக்கு, நாத - ஸ்வாமியே, புவநபூஷண நாத என்றும் பதம் பிரிப்பாருண்டு. பவந்தம் - உம்மை

அபிஷ்டுவந்த: - ஸ்தோத்திரம் செய்கிறவர்கள், பூதலே - பூமியிலே, பூதைர்-ஸத்தியமாயிருக்கிற, (உண்டாயிருக்கிற) குணை: - குணங்களினாலே, பவந்தம் - உமக்கு, துல்யா: - ஸமானர்களாக, பவந்தி - ஆகிறார்கள். (இது) நாத்யத்புதம் - அதிக ஆச்சரியமன்று, நநு - அவ்வாறன்றோ. இஹ - இவ்வுலகில், ய: - எவனொருவன், ஆச்ரிதம் - தன்னையடைந்தவனை, பூத்யா - ஸம்பத்தினால், ஆத்மஸமம் - தனக்கு ஸமானனாக, ந கரோதி - செய்கிறானில்லையோ, தேந - அவனால், கிம் வா - என்ன பிரயோஜனம். குணை: பவந்தம் அபிஷ்டுவந்த: என்றும் அன்வயம் கூறுவர்

இவ்வுலகத்தில் மனிதர்களே தம்மைச் சேர்ந்தவர்களை தம் உதவியினால் தமக்கு ஸமானமான ஸம்பத்து பெறும்படி செய்கிறார்கள். அப்படியிருக்க, வாராய் திரிலோக திலகனே, உம்முடைய நித்திய குணங்களைக்கொண்டு உம்மைத் துதிப்போர் உம்மைப்போலாவார் என்பதற்கு என்ன ஆச்சரியம்.

த்ருஷ்ட்வா பவந்தமநிமேஷ விலோகநீயம்
நாந்யத்ர தோஷமுபயாதி ஜநஸ்ய சக்ஷு: |
பீத்வா பய: சசிகரத்யுதி துக்தஸிந்தோ:
க்ஷாரம் ஜலம் ஜலநிதேரஸிதும் க இச்சேத்

அநிமேஷவிலோகநீயம், அநிமேஷ - இமைகொட்டாமல் பார்க்கிற தேவர்களினால் அல்லது இமைகொட்டாமல், விலோகநீயம் - பார்க்கத் தகுந்தவராயிருக்கிற, பவந்தம் - உம்மை, த்ருஷ்ட்வா - பார்த்துவிட்டு, ஜநஸ்ய - மனிதனுடைய, சக்ஷு: - கண், அந்யத்ர - (ஹரிஹராதி) இதரர்களிடத்தில், தோஷம் - ஸந்தோஷத்தை, ந உபயாதி

அடைகிறதில்லை. துக்தஸிந்தோ: - பாற்கடலினுடைய, ஶஶிகரத்யுதி - சந்திரகிரணம்போல் பிரகாசிக்கிற, பய: - ஜலத்தை, பீத்வா - குடித்துவிட்டு, ஜலநிதே: - ஸமுத்திரத்தினுடைய, க்ஷாரம் - உவர்ப்பான, ஜலம் - ஜலத்தை, அஶிதும் - உட்கொள்ள பானம் செய்ய, க: - எவன், இச்சேத் - இச்சிப்பான்.

பாற்கடலின் பாலையுண்டவன் சமுத்திரத்தின் ஜலத்தையுண்ண ஒருப்படுவானோ? அப்படியே உம்மைக்கண்ட கண்கள் வேறு எந்த தெய்வத்தைக் கண்டு ஆனந்தமடையும்? (11)

யை: ஶாந்தராகருசிபி: பரமாணுபிஸ்த்வம்
நிர்மாபிதஸ்த்ரிபுவனைகலலாமபூத ।
தாவந்த ஏவ கலு தேऽப்யணவ: ப்ருதிவ்யாம்
யத்தே ஸமானமபரம் ந ஹி ரூபமஸ்தி ॥

த்ரிபுவனைகலலாமபூத, த்ரிபுவன - மூன்று லோகத்துக்கும், ஏக - முக்கியமான, லலாமபூத - பூஷணமாயிருக்கப்பட்டவரே, ஶாந்தராகருசிபி:, ஶாந்த - ஓய்ந்த, ராக - விருப்பம் என்ன, ருசிபி: - அதிகப் பற்றுதல் என்ன, இவைகளையுடைத்தான, அல்லது விடப்பட்ட ராகத்தினாலான காந்திகளோடு கூடிய, யை: பர மாணுபி: - எந்த புத்கல பரமாணுக்களால், த்வம் - நீர், நிர்மாபித: - நிர்மிக்கப்பட்டிருக்கிறீரோ, தே - அந்த, அணவோऽபி - பரமாணுக்களும், தாவந்த ஏவ - அவ்வளவினவே, கலு - நிச்சயம். யத் - யாதொரு காரணத்தால், (என்ன காரணமென்றால்) தே - உமக்கு, ஸமானம்-

ஸமானமான, அபரம் - வேறு, ரூபம் - உருவம், நாஸ்தி - இல்லையன்றோ.

மூன்று லோகத்துக்கும் சிரோமணியாயிருக்கப்பட்டவரே! உம்முடைய திவ்விய சரீரம் எந்த வீதராக பரமாணுக்களால் செய்யப்பட்டதோ, அந்தப் பரமாணுக்கள் உலகத்தில் அவ்வளவே போலும். வேறே இருக்குமாகில், உம்முடையதைப்போன்ற வேறு ரூபமிருக்க வேண்டுமல்லவா?

வக்த்ரம் க்வ தே ஸுரநரோரகநேத்ரஹாரி
நிஶ்ஶேஷநிர்ஜிதஜகத்த்ரிதயோபமானம் ।
பிம்பம் கலங்கமலினம் க்வ நிஶாகரஸ்ய
யத்வாஸரே பவதி பாண்டுபலாஶகல்பம் ॥

ஸுரநரோரகநேத்ரஹாரி, ஸுர - தேவர்கள் நர - மனிதர்கள், உரக - நாகர்கள் இவர்களுடைய, நேத்ரஹாரி - நேத்திரத்தைக் கவரக்கூடியதாயும், நிஶ்ஶேஷநிர்ஜிதஜகத்த்ரிதயோபமானம், நிஶ்ஶேஷ - பூருவும் நிர்ஜித - ஜயிக்கப்பட்ட, ஜகத்த்ரிதய - மூவுலகத்திலுமுள்ள, உபமானம் - உவமைப் பொருளையுடையதுமான, தே - உம்முடைய, வக்த்ரம் - முகம், க்வ - எங்கே? யத் - யாதொரு சந்திரமண்டலமானது, வாஸரே - பகலில், பாண்டுபலாஶகல்பம் - வெண்மையான இலைக்கு ஸமானமாக, பவதி - இருக்கிறதோ, கலங்கமலினம் - களங்கத்தினால் அழுக்கடைந்த, நிஶாகரஸ்ய - சந்திரனுடைய, தத் - அந்த, பிம்பம் - மண்டலமானது, க்வ - எங்கே?

நிஷ்களங்கமாயும் நித்தியப் பிரகாசியுமாயிருக்கிற உம்முடைய முகத்திற்கு மாசுற்றதும் ஜோதிக்குறைவுள்ளதுமான சந்திரமண்டலம் உபமானமாகுமோ? உமது முகத்துக்கு ஸமானமான ஜோதி மூவுலகத்திலுமில்லை. (13)

𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌕𑌲𑌾𑌕𑌲𑌾𑌪
𑌶𑍁𑌭𑍍𑌰𑌾 𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌂 𑌤𑌵 𑌲𑌙𑍍𑌘𑌯𑌨𑍍𑌤𑌿 ।
𑌯𑍇 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌨𑌾𑌥𑌮𑍇𑌕𑌂
𑌕𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌰𑌯𑌤𑌿 𑌸𑌂𑌚𑌰𑌤𑍋 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌮𑍍 ॥

𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰 - மூன்று லோகத்துக்கும் நாதனே, 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣.....𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌃, 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣 - பூர்ணமான, 𑌮𑌣𑍍𑌡𑌲 - மண்டலத்தையுடைய, 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕 - சந்திரனுடைய, 𑌕𑌲𑌾𑌕𑌲𑌾𑌪 - கலைசமூகங்கள்போல், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌃 - வெண்மையான, 𑌤𑌵 𑌗𑍁𑌣𑌾𑌃 - உம்முடைய குணங்கள், 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌂 - மூன்று லோகங்களையும், 𑌲𑌙𑍍𑌘𑌯𑌨𑍍𑌤𑌿 - கடந்து செல்கின்றன. 𑌯𑍇 - எந்த குணங்கள், 𑌨𑌾𑌥𑌂 𑌏𑌕𑌂 - (எல்லாவற்றுக்கும்) ஸ்வாமியான ஒருவனை (உம்மை) 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 - அடைந்திருக்கின்றனவோ, 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌂 - இஷ்டப்படி, 𑌸𑌂𑌚𑌰𑌤𑌃 - ஸஞ்சரிக்கின்ற, 𑌤𑌾𑌨𑍍 - அந்தக் குணங்களை, 𑌕𑌃 - எவன், 𑌨𑌿𑌵𑌾𑌰𑌯𑌤𑌿 - தடுக்கிறான் (தடுப்பான்.) 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌨𑌾𑌥𑌂 - என்று ஒரு பதமாக்கி, மூவுலகங்களின் அதிபதிகளுக்கும் அதிபதியாகிய என்று பொருள் கூறலுமாம். 𑌏𑌕𑌂 - ஒப்பற்ற என்னலுமாம்.

உம்முடைய பரிசுத்த குணங்கள் மூன்று லோகத்தையும் மீறினவாகும்; ஒப்பற்ற திருலோகநாதனை அடைந்து எதேஷ்டமாய்த் திரிகின்ற அக்குணங்களைத் தடுகின்றவன் எவன்? அவைகளின் ஸ்வதந்தரமும் அடங்காப்பெறுமையும் உம்மைச் சேர்ந்ததாலல்லவோ? (14)

𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰 𑌯𑌦𑌿 𑌤𑍇 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌭𑌿𑌰𑍍
𑌨𑍀𑌤𑌂 𑌮𑌨𑌾𑌗𑌪𑌿 𑌮𑌨𑍋 𑌨 𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑍍 ।
𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑌮𑌰𑍁𑌤𑌾 𑌚𑌲𑌿𑌤𑌾𑌚𑌲𑍇𑌨
𑌕𑌿𑌂 𑌮𑌨𑍍𑌦𑌰𑌾𑌦𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌰𑌂 𑌚𑌲𑌿𑌤𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 ॥

𑌤𑍇 - உம்முடைய, 𑌮𑌨𑌃 - மனமானது, 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌭𑌿𑌃 - தேவஸ்திரீகளால், 𑌵𑌿𑌕𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 - நிலைமாறும் வழியை, 𑌮𑌨𑌾𑌗𑌪𑌿 - கொஞ்சங்கூட, 𑌨 𑌨𑍀𑌤𑌂 𑌯𑌦𑌿 - அடைவிக்கப்படவில்லையாகில், 𑌅𑌤𑍍𑌰 - இவ்விஷயத்தில், 𑌕𑌿𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 - ஆச்சர்யம் என்ன? 𑌚𑌲𑌿𑌤𑌾𑌚𑌲𑍇𑌨 - அசைக்கப் பட்ட மலைகளையுடைய, 𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑌮𑌰𑍁𑌤𑌾 - பிரளய காலத்திலுண்டான காற்றினல், 𑌮𑌨𑍍𑌦𑌰𑌾𑌦𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌰𑌂 - மந்தரபர்வதத்தின் சிகரமானது, 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 - எப்பொழுதாவது 𑌚𑌲𑌿𑌤𑌂 𑌕𑌿𑌂 - அசைக்கப்படுமா என்ன ?

மலைகளையும் ஆட்டிவைக்கும்படியான ஊழிகாலக் காற்றினல் மந்தரமலையின் சிகரமானது எப்படி அசைக்கப் படமாட்டாதோ, அப்படியே இதர தேவர்களின் மனத்தைக் கவரக்கூடிய தேவஸ்திரீகளாலும் உம்முடைய மனம் ஒருபோதும் கலக்கமடையாது. (15)

𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌮𑌵𑌰𑍍𑌤𑌿𑌰𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌤𑍈𑌲𑌪𑍂𑌰𑌃
𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌜𑌗𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑍋𑌷𑌿 ।
𑌗𑌮𑍍𑌯𑍋 𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌮𑌰𑍁𑌤𑌾𑌂 𑌚𑌲𑌿𑌤𑌾𑌚𑌲𑌾𑌨𑌾𑌂
𑌦𑍀𑌪𑍋𑌽𑌪𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿 𑌨𑌾𑌥 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 ॥

𑌨𑌾𑌥 - வாராய் ஸ்வாமியே, 𑌤𑍍𑌵𑌂 - நீர், 𑌨𑌿𑌰𑍍𑌧𑍂𑌮𑌵𑌰𑍍𑌤𑌿𑌃 - புகையில்லாமலும் திரியில்லாமலும், 𑌅𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌤𑍈𑌲𑌪𑍂𑌰𑌃 - எண்ணெயால் நிரப்பப்படாமலும்

இருந்துகொண்டு, இதம் - இந்த, க்ருத்ஸ்நம் - ஸமஸ்தமான, ஜகத்த்ரயம் - மூன்று லோகத்தையும், ப்ரகடீகரோஷி - பிரகாசிக்கச் செய்கிறீர். சலிதாசலாநாம் - அசைக்கப்பட்ட மலைகளையுடைய, மருதாம் - காற்றுக்களுக்கு, ஜாது - ஒருகாலும், ந கம்ய꞉ - அடையக்கூடாததாயும், (காற்றில் கெடாத) ஜகத்ப்ரகாஶ꞉-லோகம்முழுமையும் வெளிச்சத்தையுடையதுமான, அபர꞉ தீப꞉ - ஒரு விலக்ஷணமான தீபமாக, அஸி - இருக்கிறீர்.

உலகத்திலுள்ள விளக்கு புகையுள்ளது. நீரோ காதி அகாதி கர்மமாகிற புகையை அதாவது தோஷத்தை ஒழித்தீர். விளக்குக்கு வர்த்தி உண்டு. உமக்கு ஏதொரு அவஸ்தா ரூபமான வர்த்தி (தொழில்) இல்லை. தீபத்திற்கு எண்ணெய் உண்டு-உமக்கு சிநேக ராக முதலான பற்று இல்லை. தீபம் காற்றினுல் அணைக்கப்படும். நீரோ மூன்றுலோகத்துத் திண்மையும் அசைக்கக்கூடிய மோகாதி பெருங்காற்று களால் அடையக்கூடியவரல்லர். விளக்கு நின்ற இடத்தில் மட்டும் வெளிச்சம் கொடுக்கும். நீர் உம்முடைய கேவல ஞானத்தால் மூன்று லோகமும் பிரகாசிக்கிறீர். ஆகையால் நீர் ஒரு அபூர்வ தீபமாயிருக்கிறீர். (16)

நாஸ்தம் கதாசிதுபயாஸி ந ராஹுகம்ய꞉
ஸ்பஷ்டீகரோஷி ஸஹஸா யுகபஜ்ஜகந்தி ।
நாம்போதரோதர நிருத்தமஹாப்ரபாவ꞉
ஸூர்யாதிஶாயிமஹிமாஸி முநீந்த்ர லோகே ॥

கதாசித் - ஒருகாலத்திலும், அஸ்தம்-அஸ்தமயத்தை, ந உபயாஸி - அடைகிறீர் இல்லை, ந ராஹுகம்ய꞉ - இராகுவினுல் அடையக்கூடியவரும் அல்ல, ஸஹஸா -

சீக்கிரமாக, யுகபத் - ஒரே ஸமயத்தில், ஜகந்தி - மூன்று லோகங்களையும், ஸ்பஷ்டீகரோஷி - பிரகாசம் செய்கிறீர், அம்போதர...ப்ரபாவ:, அம்போதர - மேகத்தினுடைய, உதர - மத்தியத்தினால், நிருத்த-மறைக்கப்பட்ட, மஹாப்ரபாவ: - அதிக மஹிமையை உடையவராக, ந - இல்லை, ஆகையால் முநீந்த்ர - வாராய் முனிச்ரேஷ்டரே, லோகே - லோகத்தில், ஸூர்யாதிசாயிமஹிமா-ஸூர்யனை அதிக்கிரமித்த மகிமையை உடையவராக, அஸி - இருக்கிறீர்.

வாராய் முனிநாயகனே! ஸூரியனுக்கு உண்டான அஸ்தமயம் இராகு கிரகணம்மேகாவரணம் முதலியதோஷங்கள் உம்மிடத்தில் இல்லாததால் உம்முடைய மகிமை ஸூரியனதிலும் மேம்பட்டது. (17)

நித்யோதயம் தளிதமோஹமஹாந்தகாரம்
கம்யம் ந ராஹுவதநஸ்ய ந வாரிதாநாம் |
விப்ராஜதே தவ முகாப்ஜமநல்பகாந்தி
வித்யோதயஜ்ஜகதபூர்வசசாங்கபிம்பம் ||

நித்யோதயம் - ஸர்வகாலமும் உதயத்தை உடையதும், தளித.....அந்தகாரம், தளித - நாசம் செய்யப்பட்டிருக்கிற, மோஹ - அஜ்ஞானமாகிற, மஹாந்தகாரம் - பேரிருளை உடையதாயும், ராஹுவதநஸ்ய - ராகுவின் முகத்திற்கு, ந கம்யம் - அடையக்கூடாததாயும், வாரிதாநாம் - மேகங்களுக்கு, ந கம்யம் - அடையக்கூடாததாயும், ஜகத் - உலகத்தை, வித்யோதயத் - பிரகாசம் செய்கிறதாயும் இருக்கிற, தவ - உம்முடைய, அநல்பகாந்தி - மிகுந்த

ஜோதிஸ்ஸையுடைய, முகாப்ஜம் - முககமலமானது, அபூர்வ......பிம்பம், அபூர்வ - இதற்குமுன் இல்லாத தான, ஶஶாங்கபிம்பம் - சந்திரமண்டலமாக, விப்ராஜதே - விளங்குகின்றது.

உம்முடைய முககமலம் ஒரு அபூர்வ சந்திரமண்டலமாக இருக்கிறது. எப்படியென்றால், சந்திரன் ராத்திரியில் மட்டும் உதிக்கிறான்; உம்முடைய முகம் நித்தியோதயம்; சந்திரன் சாதாரண இருளை நாசம் செய்கிறான்; உம்முடைய முகமோ அஜ்ஞானமாகிற இருட்டைக் கெடுக்கிறது. சந்திரனோ ராகுவால் பிடிக்கப்படுகிறான்; மேகத்தால் மறைக்கப்படுகிறான். உம்மை மறைக்க ஒன்றுமில்லை. சந்திரன் அல்ப காந்தியுடையவனாகவும் சிலவிடத்தில்மட்டும் பிரகாசித்துக் கொண்டும் இருக்கிறான்; நீரோ அனந்தஜோதியும் திரிலோக பிரகாசமும் உடையீர். (18)

கிம் ஶர்வரீஷு ஶஶினாஹ்நி விவஸ்வதா வா
யுஷ்மன்முகேந்து தலிதேஷு தமஸ்ஸு நாத |
நிஷ்பந்நஶாலிவநஶாலினி ஜீவலோகே
கார்யம் கியஜ்ஜலதரைர்ஜலபாரநம்ரை: ||

நாத - வாராய் ஸ்வாமியே, தமஸ்ஸு - இருட்டுகள், யுஷ்மன்......தலிதேஷு, யுஷ்மத் - உம்முடைய, முக - முகமாகிற, இந்து - சந்திரனால், தலிதேஷு ஸத்ஸு - போக்கடிக்கப்பட்டிருக்கும்போது, ஶர்வரீஷு - இராத்திரிகளில், ஶஶினா - சந்திரனாலே, அஹ்நி - பகலில், விவஸ்வதா வா - சூரியனாலும்தான், கிம் - என்ன(ப்ரயோஜநம்) ஜீவலோகே - பூலோகமானது, நிஷ்பந்ந......ஶாலிநி, நிஷ்பந்ந - நன்றாய் விளைந்திருக்கிற, ஶாலிவந - சம்பா

வயல்களால், ஶாலிநீ ஸதி - விளங்கும்போது, ஜலஸார நமெரூ: - ஜலத்தின் சுமையால் வணங்கியிருக்கிற, ஜல யமெர: - மேகங்களினால், கார்யம் - செய்யக்கூடியது, கியத் - எவ்வளவு ?

பூலோகத்தில் வயல்கள் நன்றாய் விளைந்திருக்கும்போது நீர்கொண்ட மேகத்தால் எப்படிப் பயனில்லையோ, அப்படியே உம்முடைய முகம் இருட்டைப் போக்கும்போது இரவில் சந்திரனாலும் பகலில் சூரியனாலும் யாதொரு பிரயோஜனமுமில்லை. (19)

ஜ்ஞாநம் யதா த்வயி விபாதி க்ருதாவகாஶம்
நைவம் ததா ஹரிஹராதிஷு நாயகேஷு ।
தேஜ: ஸ்புரந்மணிஷு யாதி யதா மஹத்த்வம்
நைவம் து காசஶகலே கிரணாகுலேऽபி ॥

ஹே நாத - வாராய் ஸ்வாமியே, த்வயி - உம்மிடத்தில், க்ருதாவகாஶம் - இடங்கொண்டுள்ள, ஜ்ஞாநம் - கேவலஜ்ஞாநம், யதா - எப்படி, விபாதி - விளங்குகின்றதோ, ததா ஏவம் - அப்படி இந்தமாதிரி, ஹரிஹராதிஷு - ஹரி ஹரன் முதலாகிய, நாயகேஷு - ஸ்வாமிகளிடத்தில், மித்தியா தெய்வங்களிடத்தில், ந - இல்லை, (எப்படியென்றால்) தேஜ: - ஒளியானது, ஸ்புரந்மணிஷு - உயர்ந்த ரத்தினங்களில், மஹத்த்வம் - அதிகமாயிருக்குந் தன்மையை, யதா - எப்படி, யாதி - அடைகிறதோ, கிரணாகுலேऽபி - காந்தியால் வியாபிக்கப்பட்டிருந்தபோதிலும், காசஶகலே து - வளையலோட்டிலோ, ஏவம் - இந்தமாதிரியாக, ந யாதி - அடைகிறதில்லை.

மேலான ரத்னங்களிலிருக்கும் மகத்தான ஜோதிசப்படி வளையல் துண்டில் உண்டாகாதோ, அப்படியே உம்மிடத்திலுள்ள அநந்தமான கேவல ஜ்ஞானம் வேறு தெய்வத்திடம் காணப்படாது. (20)

மந்யே வரம் ஹரிஹராதய ஏவ த்ருஷ்டா
த்ருஷ்டேஷு யேஷு ஹ்ருதயம் த்வயி தோஷமேதி ।
கிம் வீக்ஷிதேந பவதா புவி யேந நாந்ய:
கஶ்சிந்மநோ ஹரதி நாத பவாந்தரேऽபி ॥

நாத - வாராய் ஸ்வாமியே, த்ருஷ்டா: - பார்க்கப்பட்ட, ஹரிஹராதய ஏவ - விஷ்ணு சிவன் முதலானவர்களே, வரம் - மேலானவர்கள், மந்யே - (என்று) எண்ணுகிறேன், யேஷு - எவர்கள், (ஹரிஹராதிகள்) த்ருஷ்டேஷு ஸத்ஸு - பார்க்கப்பட்டிருக்கும்போது, ஹ்ருதயம் - மனமானது, த்வயி - உம்மிடத்தில், தோஷம் - ஸந்தோஷத்தை, ஏதி - அடைகிறது, வீக்ஷிதேந - பார்க்கப்பட்டிருக்கிற, பவதா - உம்மால், கிம் - என்ன பிரயோஜனம், யேந - யாதொரு காரணத்தினால், புவி - பூமியில், அந்ய: கஶ்சித் - வேறு எந்த தெய்வமும், பவாந்தரேऽபி - ஜன்மாந்தரத்திலுங்கூட, மந: - மனத்தை, ந ஹரதி - அபஹரிக்கிறதில்லை.

ஹரி ஹராதிகளைப் பார்ப்பதே மேலானதென்று நினைக்கிறேன். ஏனென்றால் அவர்களைப் பார்த்த பிறகு உம்மைப் பார்த்தால் மனத்துக்கு மிகுந்த ஸந்தோஷம் உண்டாகிறது. உம்மைப் பார்த்தவர்களின் மனம் எக்காலத்திலும் வேறெவரிடத்திலும் ஸந்தோஷ மடைவதில்லையாகையால் உம்மைப் பார்ப்பதால் என்ன பிரயோஜனம்? (நீரே மற்றவர்களைக்

காட்டிலும் மேலானவர் என்று நிந்தாஸ்துதியால் விளக்கப் பட்டது) (21)

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌶𑌤𑌾𑌨𑌿 𑌶𑌤𑌶𑍋 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍
𑌨𑌾𑌨𑍍𑌯𑌾 𑌸𑍁𑌤𑌂 𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌮𑌂 𑌜𑌨𑌨𑍀 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌾 𑌦𑌿𑌶𑍋 𑌦𑌧𑌤𑌿 𑌭𑌾𑌨𑌿 𑌸𑌹𑌸𑍍𑌰𑌰𑌶𑍍𑌮𑌿𑌂
𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑍇𑌵 𑌦𑌿𑌗𑍍𑌜𑌨𑌯𑌤𑌿 𑌸𑍍𑌫𑍁𑌰𑌦𑌂𑌶𑍁𑌜𑌾𑌲𑌮𑍍 ॥

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌶𑌤𑌾𑌨𑌿 - நூற்றுக்கணக்கான ஸ்திரீகள், 𑌶𑌤𑌶𑌃 - நூற்றுக்கணக்காக, 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 - பிள்ளைகளை, 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑌿 - பெறுகின்றார்கள். 𑌅𑌨𑍍𑌯𑌾 𑌜𑌨𑌨𑍀 - வேறு தாயானவள், 𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌮𑌂 - உம்மைப்போன்ற, 𑌸𑍁𑌤𑌂 - புத்திரனை, 𑌨 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾 - பெற்றாளில்லை, (எப்படிப்போலவென்றால்) 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌦𑌿𑌶𑌃 - எல்லாத் திக்குகளும், 𑌭𑌾𑌨𑌿 - நக்ஷத்திரங்களை, 𑌦𑌧𑌤𑌿 - தரியாநிற்கின்றன, 𑌪𑍍𑌰𑌾𑌚𑍀 𑌏𑌵 𑌦𑌿𑌕𑍍 - கிழக்குத் திக்கு ஒன்றுதான், 𑌸𑍍𑌫𑍁𑌰𑌦𑌂𑌶𑍁𑌜𑌾𑌲𑌂 - பிரகாசிக்கிற கிரணஸமூஹங்களை உடைய, 𑌸𑌹𑌸𑍍𑌰𑌰𑌶𑍍𑌮𑌿𑌂 - ஸூரியனை, 𑌜𑌨𑌯𑌤𑌿 - பெறுநிற்கின்றது.

எல்லாத் திக்குகளிலும் நக்ஷத்திரங்கள் உதிக்கின்றன; ஜகத்பிரகாசமான ஸூரியனைக் கிழக்கு திக்கு ஒன்றுதான் உதிப்பிக்கிறது. அப்படியே உலகத்திலுள்ள ஸ்திரீகள் அநேக பிள்ளைகளைப் பெறுகிறார்கள்; உம்மைப்போன்ற ஒப்பற்ற புத்திரனைப் பெறும் பாக்கியம் உம்தாய் ஒருவளே அடைந்தாள். (22)

𑌤𑍍𑌵𑌾𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌮𑌾𑌂𑌸𑌮𑍍
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌮𑌮𑌲𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।

த்வாமேவ ஸம்யகுபலப்ய ஜயந்தி ம்ருத்யும்
நாந்ய: ஶிவ: ஶிவபதஸ்ய முனீந்த்ர பந்தா: ॥

ஹே முனீந்த்ர - வாராய் கணதராதிகளுக்கு நாயகனே, முநய: - முநிகள், த்வாம் - உம்மை, பரமம் - உத்கிருஷ்டராகவும், பவித்ரம் - பரிசுத்தராகவும், தமஸ: - பாபமாகிற இருட்டுக்கு, பரஸ்தாத் - அப்புறமுள்ளவராகவும், ஆதித்யவர்ணம் - ஸூரியனைப்போன்ற நிறமுடையவராகவும், அமலம் - நிர்மலராகவும், ஆமனந்தி - நினைக்கிறார்கள். த்வாமேவ - உம்மையே, ஸம்யக் - நன்றாக, உபலப்ய - அறிந்து அல்லது அடைந்து, ம்ருத்யும் - மரணத்தை அல்லது ஸம்ஸாரத்தை, ஜயந்தி - ஜெயிக்கிறார்கள் ஶிவபதஸ்ய - மோக்ஷபதவிக்கு, அந்ய: - வேறான, ஶிவ: - மங்களகரமான, பந்தா: - மார்க்கம், ந - இல்லை.

வாராய் ஸ்வாமியே, முனிவர்கள் உம்மையே பரம புருஷன் அமலன் ஞானதிவாகரன் என்றிப்படிச் சொல்லுகிறார்கள். உம்மை அடைந்தவர்கள் காலனையும் ஜெயிக்கிறார்கள். உம்மை விட வேறு மோக்ஷமார்க்கம் ஏது. (23)

த்வாமவ்யயம் விபுமசிந்த்யமஸங்க்யமாத்யம்
ப்ரஹ்மாணமீஶ்வரமனந்தமனங்ககேதும் ।
யோகீஶ்வரம் விதிதயோகமனேகமேகம்
ஜ்ஞானஸ்வரூபமமலம் ப்ரவதந்தி ஸந்த: ॥

ஸந்த: - ஸத்புருஷர்கள், த்வாம் - உம்மை, அவ்யயம் - நாசமில்லாதவரென்றும், விபும் - எங்கும் வியாபித்தவரென்றும், அசிந்த்யம் - ஸ்மரிக்கவும் முடியாதவரென்றும், அஸங்க்யம் - எண்ணிக்கையற்றவரென்றும், ஆத்யம் - முதல்

வரென்றும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 - பிரம்மாவென்றும், 𑌈𑌶𑍍𑌵𑌰𑌂 - ஈஶ்வரனென்றும், 𑌅𑌨𑌙𑍍𑌗𑌕𑍇𑌤𑍁𑌂 - மன்மதனுக்குக் கேட்டை விளைவிப்போனென்றும், 𑌅𑌨𑌨𑍍𑌤𑌂 - முடிவற்றவராயும், 𑌯𑍋𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 - யோகிகளுக்கு நாதனாயும், 𑌵𑌿𑌦𑌿𑌤𑌯𑍋𑌗𑌂 - அறியப்பட்ட யோகத்தையுடையவராயும், 𑌅𑌨𑍇𑌕𑌂 - பலவாயும், 𑌏𑌕𑌂 - ஒன்றாயும், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 - ஜ்ஞானஸ்வரூபராயும், 𑌅𑌮𑌲𑌂 - நிர்மலராயும், 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 - சொல்லுகிறார்கள்.

ஸத்புருஷர்களால் அவ்யய அசிந்த்ய விபு முதலாகிய நாமங்களைக் கொண்டு துதிக்கப்படும் கடவுள் நீ தான். (24)

𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌬𑍋𑌧𑌾𑌤𑍍
𑌤𑍍𑌵𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌽𑌸𑌿 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌶𑌙𑍍𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।
𑌧𑌾𑌤𑌾𑌽𑌸𑌿 𑌧𑍀𑌰 𑌶𑌿𑌵𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌿𑌧𑍇𑌰𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌽𑌸𑌿 ॥

𑌹𑍇 𑌧𑍀𑌰 - வாராய் தீரனை ஸ்வாமியே, 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 - நீதானே, 𑌵𑌿𑌬𑍁𑌧...𑌬𑍋𑌧𑌾𑌤𑍍, 𑌵𑌿𑌬𑍁𑌧 - தேவர்களினாலே, 𑌅𑌰𑍍𑌚𑌿𑌤 - பூஜிக்கப்பட்டிருக்கிற, 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 - கேவலஞானத்தை, 𑌬𑍋𑌧𑌾𑌤𑍍 - அறிந்ததினால், 𑌬𑍁𑌦𑍍𑌧𑌃 - புத்தனாக, 𑌅𑌸𑌿 - ஆகாநின்றாய். 𑌭𑍁𑌵𑌨...𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯 - மூன்று லோகத்திலுள்ள பிராணிகளுக்கு, 𑌶𑌂𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 - ஸௌக்கியத்தைப் பண்ணுவதினால், 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌶𑌂𑌕𑌰𑌃 - சங்கரனாக, 𑌅𑌸𑌿 - ஆகாநின்றாய். 𑌶𑌿𑌵𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌿𑌧𑍇𑌃 - மோக்ஷ மார்க்கத்தின் முறையை, 𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍 - ஏற்படுத்தியதால், 𑌧𑌾𑌤𑌾 - பிரம்மாவாக, 𑌅𑌸𑌿 ஆகாநின்றாய். 𑌭𑌗𑌵𑌨𑍍 - பகவானே, 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 - நீதானே, 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 - புருஷோத்தமனாகிய விஷ்ணுவாக

வும், அஸி - ஆகாநின்றாய், வ்யக்தம் - இது ஸ்பஷ்டம். விபு- தார்சித என்று ஸம்போதநமாகக் கொள்ளலுமாம்.

பௌத்தர், எல்லாம் அநித்தியம் என்னும் மித்தியா ஞானத்தை வெளியிட்ட க்ஷணிகவாதியாகிய கௌதமனைப் புத்தனென்றார்கள். ஆனால் உன்னுடைய கேவலஜ்ஞானத் தால் ஸமஸ்த தத்துவத்தையும் அறிந்து பவ்வியஜனங் களுக்கு வெளியிட்ட நீயே புத்தனென்னும் பேருக்கு உரிமையுடையாய். ஸம்ஹாரகர்த்தாவாயும் திரிபுராரியுமாகிய கபாலியைச் சங்கரனென்பார் சிலர்; திரிலோகத்திற்கும் ஹிதத்தைச் செய்யும் ஸர்வஜீவதயாபரனாகிய நீயே சங்கரன். தவம் செய்யும்போது அப்ஸர ஸ்திரீகளைக் கண்டு தவமிழந்த நான்முகனை பிரம்மாவென்பார்; மோக்ஷவழியை உண்டு பண்ணிய நீயே உண்மையில் பிரம்மா. அவ்வாறே ஸம் ஸாரத்தில் காமலீலையிலுழன்ற மாதவனைப் புருஷோத்தம னென்றார். அநந்த ஜ்ஞானாதி குணங்களால் நிறைந்து வீதராகனாகி நிர்மல புருஷனான நீயே புருஷோத்தமன்.

துப்யம் நமஸ்த்ரிபுவநார்த்திஹராய நாத
துப்யம் நம: க்ஷிதிதலாமலபூஷணாய
துப்யம் நமஸ்த்ரிஜகத: பரமேஶ்வராய
துப்யம் நமோ ஜிந பவோததிஶோஷணாய ॥

நாத - வாராய் ஸ்வாமியே, த்ரிபுவந - மூன்று லோகத்து பிராணிகளுடைய, ஆர்த்தி - துக்கத்தை, ஹரா ய - போக்கடிக்கின்ற, துப்யம் - உன்பொருட்டு, நம: - நமஸ்காரம். க்ஷிதிதல - பூமண்டலத்துக்கு, அமல - மா சற்ற, பூஷணாய - ஒரு ஆபரணமாயிருக்கிற, துப்யம் - உன்பொருட்டு, நம: - நமஸ்காரம். த்ரிஜகத: - மூன்று லோகத்திற்கும், பரமேஶ்வராய - பரமேசுவரனாகிய, து-

த்வத்தே - உன்பொருட்டு, நம: - நமஸ்காரம். ஜிந - வாராய் ஜிநேசுவரனே, பவ - ஸம்ஸாரமாகிற, உததி - ஸமுத்திரத்தை, சோஷணாய - வற்றச் செய்கிறவனான, துப்யம் உன்பொருட்டு, நம: - நமஸ்காரம்.

மேற் கூறிய காரணங்களினால் ஜிநேசனைக் குறித்து நமஸ்காரம் செய்கிறார். (26)

கோ விஸ்மயோऽத்ர யதி நாம குணைரசேஷை-
ஸ்த்வம் ஸம்ஶ்ரிதோ நிரவகாஶதயா முநீஶ ।
தோஷைருபாத்த விவிதாஶ்ரயஜாதகர்வை:
ஸ்வப்நாந்தரேऽபி ந கதாசிதபீக்ஷிதோऽஸி ॥

ஹே முநீஶ - வாராய் முனிகளுக்கு நாயகனே, அஶேஷை: - ஸமஸ்தமான, குணை: - குணங்களால், நிரவகாஶதயா - இடைவெளியில்லாமல், ஸம்ஶ்ரித: - அடையப்பட்டவனான, த்வம் - நீ, உபாத்த - அடையப்பட்டிருக்கிற, விவித - தேவர்களாகிற, ஆஶ்ரய - இருப்பிடத்தால், ஜாத - உண்டான, கர்வை: - கர்வத்தையுடைய, தோஷை:-தோஷங்களினாலே, ஸ்வப்நாந்தரேऽபி- ஸ்வப்ன மத்தியத்திலுங்கூட, கதாசிதபி - ஒருக்காலும், ந ஈக்ஷித: - பார்க்கப்பட்டவனாக, நாஸி யதி - ஆகவில்லை யென்றால், அத்ர - இதில், விஸ்மய: -ஆச்சரியமானது, கோ நாம - ஏது தான்.

உலகத்திலுள்ள ஸமஸ்த குணங்களும் வேறு தங்குமிடமில்லாமல் உம்மையே அடைந்து நிறைந்தன. எல்லா தோஷங்களும் ஏனைய தேவர்களிடம் போதுமான இருப்பிடம் பேற்றோமென்ற கர்வத்தினால் உம்மைக் கண்ணேக்க

வில்லை என்பது என்ன ஆச்சரியம். உம்மிடத்தில் குணம் தவிர தோஷமே இல்லை. (27)

உச்சைரசோகதருஸம்ச்ரிதமுந்மயூக
மாபாதி ரூபமமலம் பவதோ நிதாந்தம் ।
ஸ்பஷ்டோல்லஸத்கிரணமஸ்ததமோவிதானம்
பிம்பம் ரவேரிவ பயோதரபார்ச்வவர்த்தி ॥

உச்சை: அசோகதருஸம்ச்ரிதம் - உயரமான அசோகவிருக்ஷத்தை அடைந்ததாயும், உந்மயூகம் - அதிகமான கிரணத்தையுடையதும், அமலம் - பாபமில்லாததாயுமிருக்கிற, பவத: - உன்னுடைய, ரூபம் - ரூபமானது, பயோதர - மேகத்தின், பார்ச்வவர்த்தி - பக்கத்தில் இருக்கிறதாயும், ஸ்பஷ்டோல்லஸத்கிரணம் - தெளிவாக விளங்குகிற கிரணத்தையுடையதாயும், அஸ்ததமோவிதானம் - போக்கடிக்கப்பட்ட இருள் ஸமூகத்தையுடையதாயுமிருக்கிற, ரவே: - ஸூரியனுடைய, பிம்பமிவ - பிம்பத்தைப்போல், நிதாந்தம் - மிகவும், ஆபாதி - விளங்காநிற்கிறது.

அசோக விருக்ஷத்தின் கீழிருக்கும் உன் ரூபமானது மேகமண்டல ஸமீபத்தில் ஸூரியன் இருப்பதுபோல் காணப்படுகிறது. (பிராதிஹாரியம் எட்டில் முதலாவது கூறப்பட்டது) (28)

ஸிம்ஹாஸனே மணிமயூகசிகாவிசித்ரே
விப்ராஜதே தவ வபு: கனகாவதாதம் ।
பிம்பம் வியத்விலஸதம்சுலதாவிதானம்
துங்கோதயாத்ரிசிரஸீவ ஸஹஸ்ரரச்மே: ॥

மணிமயூகசிகாவிசித்ரே, மணி-ரத்தினங்களின், மயூக - கிரணங்களுடைய, சிகா - நுனிகளினால், விசித்ரே - நானாவர்ணமான, ஸிம்ஹாஸநே - ஸிம்மாஸனத்தில், கநக-ஸுவர்ணம்போல, அவபாதம்-பிரகாசிக்கின்ற, அவதாதம் என்று பாடமானால் அவதாதம் சுத்தமான, அதாவது பொன்னிறம் வாய்ந்த, தவ - உன்னுடைய, வபு: - சரீரமானது, துங்கோதயாத்ரி - உன்னதமான உதயகிரியினுடைய, சிரஸி - சிகரத்தின்மேல், அம்சுலதா - கொடிபோன்ற கிரணங்களின், விதாநம் - ஸமூகத்தையுடைய, ஸஹஸ்ரரச்மே: - ஸூரியனுடைய, பிம்பமிவ - பிம்பம்போல, விப்ராஜதே - விளங்குகிறது.

உதயகிரியின்மேல் ஸூரியமண்டலம் பிரகாசிப்பது போல மணிமிடைந்த ஸிம்மாஸனத்தின்மேல் உன்னுடைய சரீரம் விளங்குகின்றது. (29)

குந்தாவதாதசலசாமரசாருசோபம்
விப்ராஜதே தவ வபு: கலதௌதகாந்தம் |
உத்யச்சசாங்கசுசிநிர்ஜரவாரிதாரம்
உச்சைஸ்தடம் ஸுரகிரேரிவ சாதகௌம்பம் ||

குந்த - முல்லைப்பூபோல, அவதாத - வெளுத்த, சல - அசைகிறதான, சாமர - சாமரத்தினால், சாரு - மனோஹரமான, சோபம் - அழகையுடையதும், கலதௌத - தங்கம்போல, காந்தம் - ரமணீயமாயுமிருக்கிற, தவ - உன்னுடைய, வபு: - சரீரமானது, உத்யத் - உதயமாகின்ற, சசாங்க - சந்திரனுடைய, சுசி - காந்தி போலிருக்கிற, நிர்ஜரவாரி - மலையருவி ஜலத்தின், தாரம்-

பிரவாகத்தையுடையதும், 𑌶𑌾𑌤𑌕𑍌𑌮𑍍𑌭𑌂 - தங்கமயமாயுமிருக்கிற, 𑌸𑍁𑌰𑌗𑌿𑌰𑍇𑌃-மஹாமேருவினுடைய, 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃 - உன்னதமான, 𑌤𑌟𑌮𑌿𑌵 - தாழ்வரைபோல, 𑌵𑌿𑌭𑍍𑌰𑌾𑌜𑌤𑍇 - விளங்காநிற்கிறது.

பொன்மயமான மகாமேருவின் இருபக்கலும் பரிசுத்தமான ஜலமுள்ள மலையருவி யிருந்தாற்போல உன்னுடைய பரமௌதாரிக சரீரத்தின் பக்கல் சாமரைகள் வீசுகின்றன. (30)

𑌛𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑌵 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑍍
𑌉𑌚𑍍𑌚𑍈𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌥𑌗𑌿𑌤𑌭𑌾𑌨𑍁𑌕𑌰𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌮𑍍 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌫𑌲𑌪𑍍𑌰𑌕𑌰𑌜𑌾𑌲𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍋𑌭𑌂
𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌪𑌯𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌤𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌮𑍍

𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 - சந்திரனைப்போல் மனோஜ்ஞமானதும், 𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 - மேலேயிருக்கிறதும், 𑌸𑍍𑌥𑌗𑌿𑌤𑌭𑌾𑌨𑍁𑌕𑌰 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌂-ஸூரியகிரணத்தின் உஷ்ணத்தை மறைக்கிறதாயும், 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌫𑌲 - முத்தினுடைய, 𑌪𑍍𑌰𑌕𑌰 - ஸமூகத்தினால் செய்யப்பட்ட, 𑌜𑌾𑌲 - தொங்கல்களினால், 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧 - விருத்தியடைந்த, 𑌶𑍋𑌭𑌂 - காந்தியை உடைத்தாயிருக்கிறதுமான, 𑌤𑌵 - உன்னுடைய, 𑌛𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑌯𑌂 - முக்குடையானது, 𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌤𑌃 - மூன்று லோகத்திற்கும், 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌂 - பரமேச்வரனுயிருக்குந்தன்மையை, 𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌪𑌯𑌤𑍍 - வெளிப்படுத்திக்கொண்டு, 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿-விளங்குகிறது.

உன்னுடைய முக்குடையானது நீயே மூன்று லோகத்திற்கும் ஸ்வாமியென்பதைத் தெரிவித்துக் கொண்டு விளங்குகிறது. (31)

கம்பீரதாரரவபூரிததிக்விபாக:
த்ரைலோக்யலோகசுபஸங்கமபூதிதக்ஷ: ।
ஸத்தர்மராஜஜயகோஷணகோஷக: ஸந்
கே துந்துபிர்த்வநதி தே யசஸ: ப்ரவாதீ ॥

கம்பீர - கம்பீரமான, தாரரவ - உயர்ந்த சப்தத்திளுல், பூரித - நிறைக்கப்பட்டிருக்கிற, திக்விபாக: - திக்குப் பிரதேசங்களை யுடையதாயும், த்ரைலோக்ய - மூன்று லோகத்திலுமுள்ள, லோக - ஜனங்களுக்கு, சுப ஸங்கம - க்ஷேமத்தை அடைவிப்பதான, பூதி - ஸம்பத்தில், தக்ஷ: - ஸமர்த்தமானதுமாகிய, துந்துபி: - துந்துபி வாத்தியமானது, ஸத்தர்ம - ஸத்தர்மத்திற்கு, ராஜ - ராஜனுன ஸ்வாமியினுடைய, ஜயகோஷண - ஜெயகோஷணையை, கோஷக: ஸந் - வெளிப்படுத்திக்கொண்டும், தே - உன்னுடைய, யசஸ: - கீர்த்தியை, ப்ரவாதீ - சொல்லாநின்றதாயிருந்துகொண்டும், கே - ஆகாசத்திலே, த்வநதி - சப்திக்கின்றது.

தேவதுந்துபியானது தர்மராஜனுயிருக்கும் தன்மையையும் கீர்த்தியையும் வெளியிட்டுக்கொண்டு ஆகாசத்தில் சப்திக்கின்றது. (32)

மந்தாரஸுந்தரநமேருஸுபாரிஜாத
ஸந்தாநகாதிகுஸுமோத்கரவ்ருஷ்டிருத்தா ।
கந்தோதபிந்துசுபமந்தமருத்ப்ரபாதா
திவ்யா திவ: பததி தே வசஸாம் ததிர்வா ॥

உத்தா - ஊர்த்துவ முகமானதும், கந்த - வாஸனையோடு கூடிய, உதபிந்து - நீர்த்திவலைகளினுல், சுப

மநோஜ்ஞமான, மந்தமாருத - மந்தமாருதத்தினுடைய, ப்ரபாதா - வீசுதலை உடைத்தாயிருக்கிறதுமான, மந்தார - மந்தாரவிருக்ஷமென்ன, ஸுந்தர - அழகான, நமேரு - நமேருவிருக்ஷமென்ன, ஸுபாரிஜாத - அழகான பாரிஜாத விருக்ஷமென்ன, ஆதி - இவை முதலானவைகளினுடைய, ஸுமஸந்தோஹ - புஷ்பஸமூகங்களின், வ்ருஷ்டி: - மழையானது, திவ்யா - தெய்விகமான, தே - உன்னுடைய, வசஸாம் - வசநங்களுடைய, ததிவா - வரிசைபோல, திவ: - ஆகாயத்தினின்றும், பததி - விழாநிற்கிறது.

சமவசரணத்தில் உண்டாகும் புஷ்பமழையான து பகவானுடைய திவ்யதொனிக்கு ஸமானமாகக் கூறப்பட்டது.

ஶும்பத்ப்ரபாவலயபூரிவிபா விபோஸ்தே
லோகத்ரயே த்யுதிமதாம் த்யுதிமாக்ஷிபந்தீ
ப்ரோத்யத்திவாகரநிரந்தரபூரிஸம்க்யா
தீப்த்யா ஜயத்யபி நிஶாமபி ஸோமஸௌம்யாம் ||

ப்ரோத்யத்திவாகரநிரந்தரபூரிஸம்க்யா, ப்ரோத்யத் - உதயமாகின்ற, நிரந்தர - இடைவெளி இல்லாமலிருக்கிற, திவாகரபூரிஸம்க்யா - அநேகக்கணக்கான ஸூரியனுக்கு ஸமானமான, விபோ: - பிரபுவாகிய, தே - உன்னுடைய, ஶும்பத் - விளங்காநின்ற, ப்ரபாவலய - பிரபாமண்டலத்தின், பூரிவிபா - அதிசய காந்தியானது, தீப்த்யா - ஜோதியினால், லோகத்ரயே - மூன்று லோகத்திலும், த்யுதிமதாம் - பிரகாசமுள்ள பதார்த்தங்களின், த்யுதிம் - காந்தியை, ஆக்ஷிபந்தீ - போக்கடியாநின்று கொண்டு, ஸோமஸௌம்யாம் - சந்திரனால் ரமணீயமான, நிஶாமபி - ராத்திரியையும், ஜயதி - ஜெயிக்காநிற்கிறது.

உம்முடைய ப்ரபாமண்டலமானது ஜோதியினால் அநேக ஸூரியன் ஒரே ஸமயத்தில் உதயமானாற்போல் இருந்தும், சந்திரனைக்காட்டிலும்ஸௌம்யகரமாயும்ரமணீயமாயுமிருக்கிறது.

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌗𑌮𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌣𑍇𑌷𑍍𑌟𑌃
𑌸𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑌥𑌨𑍈𑌕𑌪𑌟𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌃 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌧𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌤𑍇 𑌵𑌿𑌶𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌰𑍍𑌵-
𑌭𑌾𑌷𑌾𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌃 ॥

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗 - தேவலோகமென்ன, 𑌅𑌪𑌵𑌰𑍍𑌗 - மோக்ஷமென்ன இவைகளை, 𑌗𑌮 - அடைவதற்குள்ள, 𑌮𑌾𑌰𑍍𑌗 - வழியை, 𑌵𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌣𑍇 - தேடுகிறதில், 𑌇𑌷𑍍𑌟𑌃 - பிரியமுள்ளதும், 𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾𑌃 - மூன்று லோகத்து ஜநங்களுக்கும், 𑌸𑌦𑍍𑌧𑌰𑍍𑌮 - நல்ல தர்மம், 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 - தத்துவம் இவைகளை, 𑌕𑌥𑌨 - சொல்லுவதில், 𑌏𑌕 - ஒப்பற்ற, 𑌪𑌟𑍁𑌃 - ஸமர்த்தமாயிருக்கிறதுமான, 𑌤𑍇 - உன்னுடைய, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌧𑍍𑌵𑌨𑌿𑌃 - திவ்விய வாக்கானது, 𑌵𑌿𑌶𑌦 - தெளிவான, 𑌅𑌰𑍍𑌥- பொருளுடையதும், 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌷𑌾𑌸𑍍𑌵𑌭𑌾𑌵- எல்லா பாஷையின் ஸ்வபாவமாகிய, 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌗𑍁𑌣 - பரிணம குணங்களாலே, 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌃 - ப்ரயோகிக்கக் கூடினதாகவும், 𑌭𑌵𑌤𑌿 - இருக்கிறது.

சமவசாணத்தில் உண்டாகும் திவ்விய தொனியானது மோக்ஷமார்க்கத்தை வெளியிடுவதும் கேட்போர் எல்லாருக்கும் தெரியும்படியாக அவரவர் பாஷை ஸ்வபாவத்தை உடையதாயும் இருக்கிறது. (35)

𑌉𑌨𑍍𑌨𑌿𑌦𑍍𑌰𑌹𑍇𑌮𑌨𑌵𑌪𑌙𑍍𑌕𑌜𑌪𑍁𑌞𑍍𑌜𑌕𑌾𑌨𑍍𑌤𑌿
𑌪𑌰𑍍𑌯𑍁𑌲𑍍𑌲𑌸𑌨𑍍𑌨𑌖𑌮𑌯𑍂𑌖𑌶𑌿𑌖𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑍌 ।

𑌪𑌾𑌦𑍌 𑌪𑌦𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌯𑌤𑍍𑌰 𑌜𑌿𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌧𑌤𑍍𑌤𑌃
𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

𑌜𑌿𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 - வாராய் ஸ்வாமியே, 𑌉𑌨𑍍𑌨𑌿𑌦𑍍𑌰 - மலர்ந்ததாயும், 𑌹𑍇𑌮 - தங்கமயமாயும், 𑌨𑌵 - புதிதாயுமிருக்கிற, 𑌪𑌙𑍍𑌕𑌜𑌪𑍁𑌞𑍍𑌜 - தாமரைப்புஷ்பத்தின் ஸமூகத்தினுடைய, 𑌕𑌾𑌨𑍍𑌤𑌿 - காந்திபோல, 𑌪𑌰𑍍𑌯𑍁𑌲𑍍𑌲𑌸𑌤𑍍 - எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற, 𑌨𑌖𑌮𑌯𑍂𑌖 - நகங்களின் சோபையினுடைய, 𑌶𑌿𑌖𑌾 - நுனிகளினுல், 𑌅𑌭𑌿𑌰𑌾𑌮𑍌 - மனோஜ்ஞமாயிருக்கிற; 𑌤𑌵 - உன்னுடைய, 𑌪𑌾𑌦𑍌 - பாதங்கள், 𑌯𑌤𑍍𑌰 - எவ்விடத்தில் 𑌪𑌦𑌾𑌨𑌿 - அடிவைப்புகளை. 𑌧𑌤𑍍𑌤𑌃 - செய்கின்றனவோ, 𑌤𑌤𑍍𑌰 - அவ்விடத்தில், 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌃 - தேவர்கள், 𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑌿 - தாமரைப் புஷ்பங்களை, 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑌨𑍍𑌤𑌿 - உண்டுபண்ணுகிருர்கள்.

பகவானுடைய சரணங்களுக்கு ஆஸநமாக தேவர்கள் தாமரைப் புஷ்பத்தை உண்டுபண்ணுகிருர்கள் (ஆகையால் ஜிநேசுவானுக்கு மலர்மிசை யேகினுன் என்ற பேர் உண்டாயிற்று.) (௩6).

𑌇𑌤𑍍𑌥𑌂 𑌯𑌥𑌾 𑌤𑌵 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌰𑌭𑍂𑌜𑍍𑌜𑌿𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰
𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌨𑌵𑌿𑌧𑍌 𑌨 𑌤𑌥𑌾 𑌪𑌰𑌸𑍍𑌯 ।
𑌯𑌾𑌦𑍃𑌕𑍍𑌪𑍍𑌰𑌭𑌾 𑌦𑌿𑌨𑌕𑍃𑌤𑌃 𑌪𑍍𑌰𑌹𑌤𑌾𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌾
𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌕𑍁𑌤𑍋 𑌗𑍍𑌰𑌹𑌗𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌕𑌾𑌸𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 ॥

𑌹𑍇 𑌜𑌿𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 - வாராய் ஸ்வாமியே, 𑌇𑌤𑍍𑌥𑌂 - இந்த பிரகாரம், 𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌨𑌵𑌿𑌧𑍌 - தர்மத்தை உபதேசிக்கிற விதத்தில், 𑌤𑌵 - உனக்கு, 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃 - ஸம்பத்தானது, 𑌯𑌥𑌾 - எப்படி, 𑌅𑌭𑍂𑌤𑍍 - உண்டாயிற்ருே, 𑌤𑌥𑌾.

அப்படி, யாஸ்ய - மற்றவனுக்கு நாஸ்தி . உண்டாகவில்லை, ஷூமதா ஙகாரா - இருட்டைப்போக்கடிப்பதான, ஷூஸா-காந்தியானது, ஒநக்ஷத்ரஃ-ஸூர்யனுக்கு, யாஜ்ருக் - எப்படிப்பட்டதோ, தாஜ்ருக் - அப்படிப்பட்ட காந்தி, விகாஸிநொரு - பிரகாசிப்பதாயிருந்த போதிலும், ஶ்ரஹமணஸ்ய - சந்திராதி கிருஹஸமூகத்திற்கு, கூதஃ - ஏது ;

அநேக கிரகங்கள் ஒருங்கு சேர்ந்து வெளிச்சம் கொடுத்தாலும் ஸூரியனைப்போல் இருட்டை ஒழிக்குந் தன்மை உண்டாகாது. அப்படியே அஜ்ஞானமாகிற இருட்டை போக்கடிக்கும்படியான தர்மத்தை உபதேசிக்கும் சக்தி உனக்கல்லது வேறு தெய்வத்திற்கு ஏது? (37)

ஶ்ச்யோதமதாவிலவிலோலகபோலமூல
மத்தப்ரமத்ப்ரமரநாதவிவ்ருத்தகோபம் ।
ஐராவதாபமிபமுத்ததமாபதந்தம்
த்ருஷ்ட்வா பயம் பவதி நோ பவதாஶ்ரிதானாம் ॥

ஶ்ச்யோதகல் - பெருகிக்கொண்டிருக்கிற, மத - மதஜலத்தால், ஆவில - வியாப்தமான, விலோல - அலையாநின்றிருக்கிற, கபோலமூல - கன்னத்தின் அடியில், மத்த - மதம் பிடித்தவைகளாயும், ப்ரமத் - சுழலாநின்றவைகளாயுமிருக்கிற, ப்ரமர - வண்டுகளுடைய, நாத - சப்தத்தினால், விவ்ருத்த - விருத்தியடைந்த, கோபம் - கோபத்தை உடையதும், ஐராவதாபம் - ஐராவதத்தின் சோபை போன்ற சோபையுடையதும், உத்ததம் - கொர்வமுடையதாயும், ஆபதந்தம் - எதிர்நோக்கி வருகிறதுமான, இபம் -

யானையை, த்ருஷ்ட்வா - பார்த்தும், பவதாஶ்ரிதாநாம் - உன்னை அடைந்தவர்களுக்கு, பயம் - பயம், நோ பவதி - உண்டாகிறதில்லை.

உக்கிர மதம் பிடித்து ஆரவாரத்தோடு எதிர் நோக்கி வரும் பயங்கரமான கஜேந்திரனைக் கண்டும் உன் பக்தர்களானவர்கள் பயப்படமாட்டார்கள். (38)

பிந்நேபகும்பகலதுஜ்ஜ்வலஶோணிதாக்த
முக்தாபலப்ரகரபூஷிதபூமிபாக: ।
பத்தக்ரம: க்ரமகதம் ஹரிணாதிபோபி
நாக்ராமதி க்ரமயுகாசலஸம்ஶ்ரிதம் தே ॥

பிந்ந - பிளக்கப்பட்ட, இப - யானையின், கும்ப - மஸ்தகத்திலிருந்து, கலத் - பெருகுகிறதாயும், உஜ்ஜ்வல - பிரகாசமாயுமிருக்கிற, ஶோணித - ரத்தத்தினால், அக்த - நனைக்கப்பட்ட, முக்தாபல - முத்துக்களுடைய, ப்ரகர - ஸமூகத்தினால், பூஷித - அலங்கரிக்கப்பட்ட, பூமிபாக: - பூமி பிரதேசத்தையுடையதும், பத்தக்ரம: - பாய்ச்சலின்பொருட்டு சேர்க்கப்பட்ட கால்களையுடையதாயுமிருக்கிற, ஹரிணாதிபோபி - ஸிம்மம்கூட, தே - உன்னுடைய, க்ரமயுகம - பாதயுகளமாகிற, அசல - பர்வதத்தை, ஸம்ஶ்ரிதம் - அடைந்த பக்தனை, க்ரம - தன்னுடைய காலடியை, கதோபி - சேர்ந்தவனாயிருந்தபோதிலும், நாக்ராமதி - மீறுகிறதில்லை. கெடுதி செய்கிறதில்லை.

பயங்கரமான ஸிம்மம்கூட உன் பக்தனைக் கண்டமாத்திரத்தில் கோபம் நீங்கி அவனுக்கொரு கேடும் செய்யாதொழியும். (39)

𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑌪𑌵𑌨𑍋𑌦𑍍𑌧𑌤𑌵𑌹𑍍𑌨𑌿𑌕𑌲𑍍𑌪𑌂
𑌦𑌾𑌵𑌾𑌨𑌲𑌂 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌮𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍁𑌤𑍍𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍁𑌮𑌿𑌵 𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑌮𑌾𑌪𑌤𑌨𑍍𑌤𑌂
𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌮𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌜𑌲𑌂 𑌶𑌮𑌯𑌤𑍍𑌯𑌶𑍇𑌷𑌮𑍍 ॥

𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲 - ஊழிக்காலத்து, 𑌪𑌵𑌨 - காற்றினால் 𑌉𑌦𑍍𑌧𑌤 - விருத்தியடைந்த, 𑌵𑌹𑍍𑌨𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 - அக்கினிக்குச் சமானமாயும், 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌂 - ஜ்வாலையோடு கூடினதாயும், 𑌉𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 - பிரகாசிக்கிறதாயும், 𑌉𑌤𑍍𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 - பொறிகளோடு கூடினதும், 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 - எல்லாவற்றையும், 𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍁𑌮𑌿𑌵 - பக்ஷிக்க வேணுமென்ற ஆவல் கொண்டதுபோல, 𑌸𑌂𑌮𑍁𑌖𑌂 - எதிர்முகமாக, 𑌆𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 - வருகிறதுமான, 𑌦𑌾𑌵𑌾𑌨𑌲𑌂 - காட்டுத்தீயை, 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌮𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌜𑌲𑌂 - உன்னுடைய நாமத்தைச் சொல்லுவதான ஜலமானது, 𑌅𑌶𑍇𑌷𑌂 - பாக்கியில்லாமல், 𑌶𑌮𑌯𑌤𑌿 அணைத்துவிடுகிறது.

பிரளயகாலத்துத் தீபோல எல்லாவற்றையும் பஸ்மீகரமாக செய்யும்படியான காட்டுத் தீயானது உன் பேர் சொன்ன மாத்திரத்தினால் முழுமையும் அடங்கி அணைந்து விடும். (40)

𑌰𑌕𑍍𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌮𑌦𑌕𑍋𑌕𑌿𑌲𑌕𑌣𑍍𑌠𑌨𑍀𑌲𑌂
𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌦𑍍𑌧𑌤𑌂 𑌫𑌣𑌿𑌨𑌮𑍁𑌤𑍍𑌫𑌣𑌮𑌾𑌪𑌤𑌨𑍍𑌤𑌮𑍍 ।
𑌆𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌕𑍍𑌰𑌮𑌯𑍁𑌗𑍇𑌨 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌶𑌙𑍍𑌕
𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌮𑌨𑌾𑌗𑌦𑌮𑌨𑍀 𑌹𑍃𑌦𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍁𑌂𑌸𑌃 ॥

𑌯𑌸𑍍𑌯 - யாதொரு, 𑌪𑍁𑌂𑌸𑌃 - புருஷனுடைய, 𑌹𑍃𑌦𑌿 - மனத்திலே, 𑌤𑍍𑌵𑌤𑍍 - உன்னுடைய, 𑌨𑌾𑌮 - பெயராகிற, 𑌨𑌾𑌗𑌦𑌮𑌨𑍀 - கெருடக்கிழங்கானது, (இருக்கிறதோ

அவன்) ரக்தேக்ஷணம் - சிவந்த கண்களையுடையதும், ஸமத - மதத்தோடு கூடின, கோகில - குயிலினுடைய, கண்ட - கழுத்துப்போல, நீலம் - கழுத்தில் கருப்புள்ளதும், க்ரோதோத்ததம் - கோபத்தால் அடங்காததும், உத்ப2ணம் - உயர எடுக்கப்பட்ட படத்தையுடையதும், ஆபதந்தம் - எதிரில் வராநின்றதுமான, ப2ணினம் - ஸர்ப்பத்தை, நிரஸ்தசங்க: - கொஞ்சம்கூட பயமில்லாதவனாய், க்ரமயுகேந - இரண்டு கால்களாலும், ஆக்ராமதி - மிதித்துச்செல்லா நிற்கிறான்.

கோபத்தால் கண்கள் சிவந்து, விஷத்தால் கழுத்து கருத்து, படத்தைத் தூக்கிக்கொண்டு பயங்கரமாய் எதிரில் வரும் ஸர்ப்பத்தைக் கண்ட ஒரு மனிதன், விஷாபஹாரியான நாகமணிக்கு ஒப்பான உன் பேரை மனத்தில் நினைத்துக் கொண்டு, கொஞ்சம் கூட பயமின்றி அதை மிதித்துச் செல்வான். (41)

வல்கத்துரங்ககஜகர்ஜிதபீமநாதம்
ஆஜௌ பலம் பலவதாமபி பூபதீநாம் |
உத்யத்திவாகரமயூகசிகாபவித்தம்
த்வத்கீர்த்தநாத்தம இவாசு பிதாமுபைதி ||

ஆஜௌ - யுத்தகளத்தில், வல்கத் - துள்ளுகிற, துரங்க - குதிரைகளென்ன, கஜ - யானைகளென்ன இவைகளுடைய, கர்ஜித - கர்ச்சனையினால், பீம - பயங்கரமாயிருக்கிற, நாதம் - சப்தத்தையுடைய, பலவதாம் - பராக்கிரமமுள்ளவர்களான, பூபதீநாம் - ராஜாக்களுடைய, பலம் - சேனையும், உத்யத் - உதயமாகிற, திவாகர-ஸூர்யனுடைய, மயூக - கிரணங்களுடைய, சிகா - நுனிகளால், அபவித்தம் - போக்கடிக்கப்பட்டிருக்கிற, தம இவ-

இருள்போல, ஸ்வத்ஸ்துதிநாத் - உன்னுடைய ஸ்தோத்ரத்திஞல், ஹிமாம்-நாசத்தை, ஆஸு-சீக்ரமாக, உபைதி-அடைகிறது.

ஸூர்யன் உதயமானதும் இருள் எப்படி நாசமடைகிறதோ, அப்படியே பராக்கிரம சாலிகளான சத்ரு ராஜாக்களின் சதுரங்க சேனையும் யுத்தகளத்தில் உன்னை ஸ்தோத்திரம் செய்வதாலேயே, இருக்கிற இடம் தெரியாமல் நாசமடைந்து ஒழியும். (42)

குந்தாக்ரபின்னகஜஸோணிதவாரிவாஹ
வேகாவதாரதரணாதுரயோதபீமே।
யுத்தே ஜயம் விஜிததுர்ஜயஜேயபக்ஷா
ஸ்த்வத்பாதபங்கஜவநாஸ்ரயிணோ லபந்தே॥

குந்தாக்ர......பீமே, குந்த - குந்தாயுதத்தினுடைய, அக்ர - நுனியிஞல், பின்ன - பிளக்கப்பட்ட, கஜ - யானைகளுடைய, ஸோணிதவாரிவாஹ-ரத்த ஜல ப்ரவாகங்களில், வேக - சீக்கிரமாக, அவதார - இரங்குகிறதிலும், தரண - தாண்டுகிறதிலும், ஆதுர - கவலையுள்ளவர்களான, யோத - யுத்தவீரர்களால், பீமே - பயங்கரமாயிருக்கிற, யுத்தே - யுத்தத்திலே, த்வத் - உன்னுடைய, பாத - பாதங்களாகிற, பங்கஜவந - தாமரைப் புஷ்பவனத்தை, ஆஸ்ரயிண: - அடைந்தவர்களான உன் பக்தர்கள், விஜிததுர்ஜயஜேயபக்ஷா: - ஒருவராலும் ஜெயிக்க முடியாததான சத்துரு பக்ஷத்தையும் தோல்வியடைவித்தவர்களாகி, ஜயம் - ஜெயத்தை, லபந்தே - அடைகிருர்கள்.

உன் பக்தர்கள் உன்பாத கமலங்களில் சரணமடைந்ததிஞல், பயங்கரமான யுத்தத்தில் ஒருபோதும் ஜெயிக்கப்

படாத் சத்துருக்களையும் எளிதில் தோல்வி யடைவித்து ஜெயத்தைப் பெறுகிறார்கள். (43)

அம்போநிதௌ க்ஷுபிதபீஷணநக்ரசக்ர
பாடீநபீடபயதோல்பணவாடவாக்நௌ ।
ரங்கத்தரங்கசிகரஸ்திதயாநபாத்ரா
ஸ்த்ராஸம் விஹாய பவத: ஸ்மரணாத் வ்ரஜந்தி ॥

பவத: - உம்முடைய, ஸ்மரணாத் - ஸ்மரணையினால் (பக்தர்கள்), க்ஷுபித......வாடவாக்நௌ - க்ஷுபித - கலங்கினதும், பீஷண - பயங்கரமுமான, நக்ரசக்ர - முதலை ஸமூஹம் என்ன பாடீநபீட - மீன் கூட்டம் என்ன இவற்றுக்கு, பயத - பயத்தைக்கொடுக்கிறதும், உல்பண - விருத்தியடைகிறதுமான, வாடவாக்நௌ - வடவாக்கினியையுடைய, அம்போநிதௌ - ஸமுத்திரத்தில் ரங்கத் - துள்ளுகிற, தரங்க - அலைகளினுடைய, சிகர - சிகரத்தில், ஸ்தித - இருக்கிற, யாநபாத்ரா: - ஓடத்தையுடையவர்களாய் இருந்தாலும், த்ராஸம் விஹாய - பயம் நீங்கி, வ்ரஜந்தி - கரைபோய்ச் சேருகிறார்கள்.

பயங்கரமான முதலை மகா மீன்களுள்ளதாயும், வடவாக்கினியை மத்தியிலுள்ளதாயுமிருக்கிற மகா ஸமுத்திரத்தின் மத்தியில் குழப்பத்தினால் திரண்டு பெருகும் அலைகளின் நடுவில் அகப்பட்டுக்கொண்ட கப்பல்களிலிருப்பவர் கூட உன்னை நினைத்த மாத்திரத்தில் பயம் நீங்கி சுலபமாய் கரை போய்ச் சேருவார்கள். (44)

உத்பூதபீஷணஜலோதரபாரபுக்நா:
சோச்யாம் தசாமுபகதாஸ்ச்யுதஜீவிதாசா: ।

𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌰𑌜𑍋𑌽𑌮𑍃𑌤𑌦𑌿𑌗𑍍𑌧𑌦𑍇𑌹𑌾
𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌕𑌰𑌧𑍍𑌵𑌜𑌤𑍁𑌲𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌃 ॥

𑌉𑌦𑍍𑌧𑍂𑌤 - விருத்தியாகிற, **𑌭𑍀𑌷𑌣** - பயங்கரமாயிருக்கிற, 𑌜𑌲𑍋𑌦𑌰 - மகோதரரோகத்தினுடைய, **𑌭𑌾𑌰𑌭𑍁𑌗𑍍𑌨𑌾𑌃** - சுமைக் கஷ்டத்தினால் சிதைவுண்டவர்களும், 𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌂 - பரிதபிக்கத் தகுந்த, 𑌦𑌶𑌾𑌂 - அவஸ்தையை, 𑌉𑌪𑌗𑌤𑌾𑌃 - அடைந்தவர்களும், 𑌚𑍍𑌯𑍁𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌶𑌾𑌃 - உயிர்வாழ்க்கையில் ஆசையைவிட்டவர்களும் இனிபிழைக்க மாட்டோமென்ற எண்ணமுடையவர்களுமான, 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 - மனிதர்கள், **𑌤𑍍𑌵𑌤𑍍** - உன்னுடைய, 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜 - பாதாரவிந்தங்களுடைய, 𑌰𑌜𑍋𑌽𑌮𑍃𑌤 - தூளியாகிற அமிர்தத்தினால், 𑌦𑌿𑌗𑍍𑌧 - பூசப்பட்ட, 𑌦𑍇𑌹𑌾𑌃 - தேகத்தையுடையவர்களாய், 𑌮𑌕𑌰𑌧𑍍𑌵𑌜 - மன்மதனுக்கு, 𑌤𑍁𑌲𑍍𑌯 - ஸமானமான, 𑌰𑍂𑌪𑌾𑌃-ரூபத்தையுடையவர்களாக, **𑌭𑌵𑌨𑍍𑌤𑌿**-ஆகிறார்கள்.

மகோதர வியாதியால் பீடிக்கப்பட்டு, மிகுந்த துக்ககரமான நிலைமையிலிருப்பதால் இனிப் பிழையோம் என்று உயிரின் மேல் ஆசையற்ற மனிதர்கள் கூட உன் பாதாரவிந்தத்தின் தூளாகிற சாவா மருந்து மேல்பட்டமாத்திரத்திலே, ரோகம் நீங்கி காமனுக்கு ஒப்பான அழகு பெற்று உய்வார்கள். (45)

𑌆𑌪𑌾𑌦𑌕𑌣𑍍𑌠𑌮𑍁𑌰𑍁𑌶𑍃𑌙𑍍𑌖𑌲𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑌾
𑌗𑌾𑌢𑌂 𑌬𑍃𑌹𑌨𑍍𑌨𑌿𑌗𑌡𑌕𑍋𑌟𑌿𑌨𑌿𑌘𑍃𑌷𑍍𑌟𑌜𑌙𑍍𑌘𑌾𑌃 ।
𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌮𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌨𑌿𑌶𑌂 𑌮𑌨𑍁𑌜𑌾𑌃 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌃
𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌿𑌗𑌤𑌬𑌨𑍍𑌧𑌭𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

𑌆𑌪𑌾𑌦𑌕𑌣𑍍𑌠𑌂 - பாதமுதல் கழுத்துவரையில், 𑌉𑌰𑍁 - பெரிதான, 𑌶𑍃𑌙𑍍𑌖𑌲 - சங்கிலிகளால், 𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤 - சுற்றிக் கட்டப்பட்ட, 𑌅𑌙𑍍𑌗𑌾𑌃 - சரீரத்தையுடையவர்களும், 𑌗𑌾𑌢𑌂 - நன்றாக, 𑌬𑍃𑌹𑌨𑍍𑌨𑌿𑌗𑌡𑌕𑍋𑌟𑌿 - அனேக விலங்குகளினால், 𑌨𑌿𑌘𑍃𑌷𑍍𑌟𑌜𑌙𑍍𑌘𑌾𑌃 - புண்பட்டுள்ள முழங்கால்களையுடையவர்களுமான, 𑌮𑌨𑍁𑌜𑌾𑌃 - மனிதர்கள், 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌮𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 - உன் பேராகிய மந்திரத்தை, 𑌅𑌨𑌿𑌶𑌂 - எப்பொழுதும், 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌤𑌃 - நினைக்கின்றவர்களாய், 𑌸𑌦𑍍𑌯𑌃 - உடனே, 𑌸𑍍𑌵𑌯𑌂 - தானாகவே, 𑌵𑌿𑌗𑌤𑌬𑌨𑍍𑌧𑌭𑌯𑌾𑌃 - விலங்குபயமொழிந்தவர்களாக, 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 - ஆகிறார்கள்.

பாதமுதல் கழுத்துவரையில் ஸர்வாங்கமும் சங்கிலிகளால் கட்டப்பட்டு, பளுவான விலங்குகள் கால்களில் உரைப்பட்டு புண்ணுண்ட மனிதர்களும் உன் பேராகிய மந்திரத்தை நினைத்திருந்தால் தானாகவே விலங்குகள் நீங்கி, கட்டவிழ்ந்து பயமொழிந்து ஸ்வாதந்திரிய முள்ளவராவார்கள். (46)

𑌮𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍃𑌗𑌰𑌾𑌜𑌦𑌵𑌾𑌨𑌲𑌾𑌹𑌿
𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌵𑌾𑌰𑌿𑌧𑌿𑌮𑌹𑍋𑌦𑌰𑌬𑌨𑍍𑌧𑌨𑍋𑌤𑍍𑌥𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍁 𑌨𑌾𑌶𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑌿 𑌭𑌯𑌂 𑌭𑌿𑌯𑍇𑌵
1 𑌯𑌸𑍍𑌤𑌾𑌵𑌕𑌂 𑌸𑍍𑌤𑌵𑌮𑌿𑌮𑌂 𑌮𑌤𑌿𑌮𑌾𑌨𑌧𑍀𑌤𑍇 ॥

𑌯𑌃 - யாதொருவன், 𑌮𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 - புத்திமானானவன், 𑌇𑌮𑌂 - இந்த, 𑌤𑌾𑌵𑌕𑌂 - உன்ஸம்பந்தமான, 𑌸𑍍𑌤𑌵𑌂 - ஸ்தோத்திரத்தை, 𑌅𑌧𑍀𑌤𑍇 - அத்தியயனம் பண்ணுகிறானோ, 𑌤𑌸𑍍𑌯 அவனுக்கு, 𑌮𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 - மதம்பிடித்த யானை, 𑌮𑍃𑌗𑌰𑌾𑌜-

1 𑌯𑍋𑌽𑌨𑌿𑌶𑌂 - என்றும் பாடம்

சிம்மம், ஊவாநல - காட்டுத்தீ, ஈஹி - ஸர்ப்பம், ஸம்ஹாச. யுத்தம், வாரிதி - ஸமுத்திரம், ஜலோதர - மகோதரரோகம், வந்தந - விலங்குபந்தம், இவை எட்டு காரணத்தால் உத்தம் - உண்டான, ஹயம் - பயமானது, தியேவ - தானே பயந்ததுபோல, ஆஸு - சீக்கிரமாக, நாஸம் - நாசத்தை, உபயாதி - அடைகிறது.

எவனொரு புத்திமான் உன்னுடையதான இந்த ஸ்தோத்திரத்தைபடிக்கிறானோ, அவனுக்கு மதயானை ஸிம்மம் காட்டுத்தீ ஸர்ப்பம் யுத்தம் ஸமுத்திரம், ரோகம் விலங்கு இவைகளாலுண்டாகும் பயம், தானே பயந்து அவனை விட்டு நீங்கும். (47)

ஸ்தோத்ரஸ்ரஜம் தவ ஜிநேந்த்ர குணைர்நிபத்தாம்
பக்த்யா மயா [1] ருசிரவர்ணவிசித்ரபுஷ்பாம் ।
தத்தே ஜநோ ய இஹ கண்டகதாமஜஸ்ரம்
தம் மாநதுங்கமவஸா ஸமுபைதி லக்ஷ்மீ: ॥

ஜிநேந்த்ர - வாராய் ஜிநேசுவரனே, மயா - என்னால், பக்த்யா - பக்தியோடு, தவ - உன்னுடைய, குணை: - அநந்த ஜ்ஞாநாதிகுணங்களாகிற கயிறுகளால், நிபத்தாம் - கட்டப்பட்டதாயும், ருசிரவர்ண - அழகான அக்ஷரங்களாகிற (அழகிய நிறமுள்ள) விசித்ரபுஷ்பாம் - நாநாவித புஷ்பங்களுள்ளதுமான, ஸ்தோத்ரஸ்ரஜம் - ஸ்தோத்திரமாமாகிற மாலையை, ய: - யாதொரு, ஜந: - மனிதன், இஹ - இவ்வுலகத்தில், அஜஸ்ரம் - எப்பொழுதும், கண்டகதாம் - கழுத்தில் அணியப்பட்டதாக (கண்டஸ்தமாக) தத்தே - தரிக்

1 விவிதவர்ண - என்றும் பாடம்

கிறானோ, தம் - அந்த, மாநதுங்கம் - வெகுமானத்தால் மேம்பட்ட புருஷனை, (மாநதுங்கஸூரியை) லக்ஷ்மீ:-ராஜ்ய, ஸ்வர்க்க, மோக்ஷ, லக்ஷ்மியானவள், அவசா-வேறுகதியற்றவளாய் (பரவசமாய்) ஸமுபைதி - அடைகிறாள்.

இந்தஸ்தோத்திர மாலையை எவன் ஒருவன் தன் கழுத்தில் தரிக்கிறானோ, அதாவது படித்து தியானித்துக்கொண்டு வருகிறானோ, அந்தப் புருஷனை இவ்வுலகத்ததும் அவ்வுலகத்ததுமான எல்லா ஐச்வரியங்களும் தாமாகவே வந்துசேரும்.

பக்தாமர ஸ்தோத்திரம் முற்றிற்று.